Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 16 திங்கட்கிழமை(02-10-2000)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:241

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நூலகத்தின் படிப்பகம்

## அமைச்சர் அஷ்ரப்பை பலிகொண்ட ஹெலி விபத்துக் குறித்து விசாரிப்பதற்கு அமெரிக்க உளவு அமைப்பு வருகிறது

கொழும்பு,ஒக்.2

அரனாயக்க பகுதியில் இடம்பெற்ற, அமைச்சர் அஷ்ரப் உட்பட 14பேரின் உயிர்களைப் பலிகொண்ட ஹெலி விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்கு, அமெரிக்கப் புலனாய்வு அமைப்பான எவ்.பி.ஐயின் விசாரணை அதிகாரிகள் குழுவும் இந்தியாவிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் குழுவும் இந்தவார இறுதியில் கொழும்புக்கு வரவுள்ளன.

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சு விடுத்த அழைப்பின் பேரில் இலங்கை வரவுள்ள இந்த விசாரணைக் குழுக்களின் வருகையை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் உறுதிப்படுத்தி உள்ளனர்.

இந்த விசாரணைக் குழுக்கள் இவ்வாரத்தல் இலங்கை வந்து சேர்ந்ததும் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை-

ஹெலிகொப்டர் எரிந்த சம்பவம் ஒரு விபத்து என உள்நாட்டு விசாரணைக் குழுவினர் கருதினால் அமெரிக்கப் புலனாய்வு விசாரணைக்குழு இலங்கைக்கு ஏன் அழைக்கப்பட வேண்டும் என்ற கேள்வி அவதானிகள் வட்டாரத்தில் எழுந்துள்ளது.

அத்துடன் சம்பவத்தின்போது ஹெலி மலைமுகட்டுடன் மோதியிருந்தால் ஹெலியின் அடிச்சட்டங்கள் (பிளேட்ஸ்) உடைந்திருக்கும். ஆனால் அவ்வாறான தகவல் ஒன்றும் விபத்துக் குறித்த உள்நாட்டு விசாரணைகளில் இதுவரை தெரியவரவில்லை. குறிப்பிட்ட ஹெலியின் அடிச்சட்டங்கள் எந்தவித சேதமுமின்றிக் காணப்படுகின்றன என்றும் அனுபவம் மிக்க விமான ஓட்டிகள் தரப்பில் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்துக்குள்ளான ஹெலியில் விபத்துக்கு முன் கறுப்புப் பெட்டி பொருத்தப்பட்டிருந்ததா என்ற சந்தேகமும் எழுப்பப்பட்டுள்ளது. (இ-8)



கடந்த செவ்வாயன்று ஆயுத தளபாடங்களை ஏற்றிக்கொண்டு வந்த சமயம் வல்லைப் பாலத்தில் தடம் புரண்டு கடல் நீரேரிக்குள் வீழ்ந்த படையினரின் ட்ரக் இது. பெட்டிகளில் எடுத்துவரப்பட்ட ஆயுத தளபாடங்கள் கடல் நீரேரியிலிருந்து மீட்கப்பட்டு வெளியே எடுத்து வரப்படும் காட்சி. நேற்றுப் பிற்பகல்வரை இந்த ட்ரக் நீரேரிக்குள் இருந்து மீட்கப்படவில்லை. (படம்:- ஏ.எவ்.பி.)

# எழுதுமட்டுவாழ் பிரதேசத்தில் புலிகள் ஊடறுத்துத் தாக்குதல்

## 2 மணி நேரம் கடும் சமர்

**யாழ்ப்பாணம்,ஒக்ரோபர்2**

**தென்மராட்சிக் கிழக்குப் பகுதியில் தொடர்ந்து நடைபெற்றுவரும் சண்டையில், சனிக்கிழமை மாலையில் எழுதுமட்டுவாழ் பிரதேசத்தில் உள்ள இராணுவ முன்னரங்கப் பகுதிகளை விடுதலைப்புலிகள் ஊடறுத்துச் சென்று தாக்கியதாக களமுனைச் செய்திகள் தெரிவிக்கின்றன.**

**எனினும் புலிகளின் ஊடறுக்கும் முயற்சியை தாம் வெற்றிகரமாக முறியடித்ததாக படைத்தரப்பில் அறிவிக்கப்பட்டது.**

இரண்டு மணிநேரம் உக்கிரமான சமர் நடைபெற்றதை இரு தரப்புகளின் தகவல்களும் ஊர்ஜிதம் செய்தன.

தென்மராட்சி கிழக்குப்பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்த சண்டை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சனிக்கிழமை பகல் சற்று ஓய்ந்திருந்த சண்டை அன்று பிற்பகல் மீண்டும் உக்கிரமடைந்தது.

ஆட்லறி மற்றும் மோட்டார் தாக்குதல்களை மேற்கொண்டு விடுத

(14ஆம் பக்கம் பார்க்க)

### ரோந்து சென்ற இராணுவம் மீது புலிகள் தாக்கு

மட்டக்களப்பு,ஒக்.2

வவுணதீவு இராணுவ முகாமுக்கு சமீபமாக நேற்றுக்காலை 8.30 மணியளவில் வீதி ரோந்துப் பணியில் ஈடுபட்ட படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்; 5 பேர் காயமடைந்தனர்.

மோட்டார் மற்றும் சிறு ஆயுதங்களைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும் -

காயமடைந்த சிப்பாய்கள் அனைவரும் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர் எனவும் - மட்டக்களப்பு செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை -

மேற்படி சம்பவத்தைத் தொடர்ந்து வவுணதீவு இராணுவ முகாம் பகுதியில் இருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-7-21-8-ரி)

### ஐ.தே.கட்சி கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.2

பாணுக்கான விலை அதிகரிப்பை தற்காலிகமாக ஒத்திவைக்குமாறு ஐ.தே.கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் தி. மகேஸ்வரன் பேக்கரி உரிமையாளர்களைக் கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

இம்மாதம் 10ஆம் திகதி நடைபெறும் தேர்தலில் ஐ.தே.கட்சி ஆட்சியைக் கைப்பற்றும் பட்சத்தில் உற்பத்திக்கான மானியச் செலவீனங்களை அரசே பொறுப்பேற்கும். எனவே பாணின் விலையை அதிகரிப்பதை தேர்தல் நடைபெறும் வரை ஒத்திவைக்கவும் - என்று அவர் தனது கடிதத்தில் கேட்டுள்ளார். (அ-7)

### சந்திரிகா லண்டன் சென்றதேன்?

தமது மகனான விமுத்தியை லண்டன் பல்கலைக்கழகம் ஒன்றில் சேர்ப்பதற்காகவே ஜனாதிபதி குமாரதுங்க நேற்றுமுன்தினம் லண்டன் புறப்பட்டுச் சென்றார் என்று செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

## 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் நாளை

யாழ்ப்பாணம்,ஒக்.2

கடந்த ஓகஸ்ட்டில் நடைபெற்ற 5ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் யாழ்ப்பாணத்தில் நாளை வெளியாகவிருக்கின்றன.

திருமலையில் இருந்து பருத்தித் துறைக்கு இன்று புறப்படும் சிற்றிஒவ் றிங்கோ கப்பலில் பயணம் செய்யும் தீவகக்கல்விவலய நிர்வாக உத்தியோகத்தர் செ.மெற்றாஸ்மயில் இந்த முடிவுகளை எடுத்து வருகின்றார்.

நாளை காலை முடிவுகள் வந்து சேர்ந்ததும் உடன் அவற்றைப் பாடசாலைகளுக்கு அனுப்ப யாழ்.வலய பணிமனை ஏற்பாடுகள் செய்துள்ளது.

இந்தப் பரீட்சைமுடிவுகள் கடந்த வியாழக்கிழமை கொழும்பில் வெளியாகியிருந்தது குறிப்பிடத்தக்கது. (அ-3)

### ரயில் - வான் விபத்து

கொழும்பு,ஒக்.2

நீர்கொழும்பில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற ரயில் - வான் விபத்தில் இருவர் உயிரிழந்தனர்; ஒருவர் படுகாயமடைந்தார்.

ரயில் கடவையை கடக்க முற்பட்ட வான் ஒன்று ரயில் பாதையில் விபத்துக்குள்ளானது என்றும் -

அச்சமயம் அந்தப் பாதையில் வந்துகொண்டிருந்த ரயில் அந்த வானுடன் மோதியது என்றும் - தெரிவிக்கப்பட்டது. (உ-3-ரி)

## தென்மராட்சிப் பிரதேச செயலக ஆவணங்கள் மழை வெள்ளத்தில்!

தென்மராட்சி,ஒக்.2

சாவகச்சேரி நகரத்தில் அமைந்துள்ள தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் கூரைகள் ஷெல் தாக்குதல்களால் சேதம் அடைந்திருப்பதால் செயலக ஆவணங்கள் மழை வெள்ளத்தில் மிதப்பதாகப் பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

நேற்று அங்கு சென்று அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்ட பின்னர் இத்தகவலை அவர் வெளியிட்டார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 250 குடும்பங்கள் வடமராட்சிக்கு இடம்பெயர்வு

வடமராட்சி,ஒக்.2

தென்மராட்சி கிழக்குப்பகுதியில் தொடரும் சண்டை காரணமாக அங்கிருந்து இடம்பெயர்ந்து வரணிப் பகுதியில் சிக்குண்டிருந்த பொதுமக்கள் மேலும் 250 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் நேற்றையதினம் முள்ளியூடாக வடமராட்சிக்கு வந்து சேர்ந்தனர்.

வடமராட்சிக்கு வந்த பொதுமக்கள் தமது உறவினர், நண்பர்கள்

(14ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் வசம் நவீன ரக ஆயுதங்கள்?

கொழும்பு,ஒக்.2

தென்னாபிரிக்க நாடு ஒன்றிலிருந்து விடுதலைப் புலிகள் பெருமளவு ஆயுதங்களையும் ஆயுத தளபாடங்களையும் கொள்வனவுசெய்து அவற்றை முல்லைத்தீவுக்கு கப்பல் மூலமாக எடுத்துவந்து தமது இரகசியக் களஞ்சியங்களுக்கு நகர்த்தியுள்ளனர் என்று புலனாய்வுப் பிரிவுத் தகவல்களை மேற்கோள்காட்டி செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது. கடந்த மாத ஆரம்பத்தில் இந்தக் கொள்வனவுகள் இடம்பெற்றுள்ளன என்றும் -

குறுந்தூர, நெடுந்தூர ஏவுகணைகள் நவீனரக துப்பாக்கிகள் மற்றும் நவீனரக ஆயுதங்கள் என்பன இதில் அடங்கும் எனவும் -

கடந்த மாதம் வெலிஓயாப் பகுதியில் படையினர் மீதான தாக்குதலின்போது இந்த ஆயுதங்களில் சில பரீட்சிக்கப்பட்டன என்றும் -

அந்தச் செய்தி நிறுவனம்மேலும் தெரிவித்தது. (உ-8)

### சுவரொட்டிகள் அகற்றப்பட்டன

நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு நல்லூர், கல்வியங்காடு மற்றும் திருநெல்வேலிப் பகுதிகளில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள் மீது கழிவு ஓயில் ஊற்றிய படையினர் அங்கு கட்டப்பட்டிருந்த பதாகைகளையும் அகற்றினர். (உ-7-180)

### மல்லாவியில் மருந்துக்கு தட்டுப்பாடு

வவுனியா,ஒக்.2

மல்லாவி ஆஸ்பத்திரியில் மருந்து வகைகளுக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வன்னிச் செய்திகள் தெரிவித்துள்ளன.

சலரோகம், வாதம் மற்றும் குருதி அமுக்கம் போன்ற நோய்களுக்கான மருந்துவகைகள் முற்றாக முடிவடைந்துவிட்டதால் மேற்படி சிகிச்சைப் பிரிவுகளை மூடவேண்டிய அபாயநிலை ஏற்பட்டுள்ளதாகவும்-

அந்தச் செய்திகள் மேலும் தெரிவித்தன. (அ-7-ரி)

## புலிகளுடன் இனிமேல் எவ்வித பேச்சுமில்லை என்கிறார் சந்திரிகா

கொழும்பு,ஒக்.2

விடுதலைப்புலிகளுடன் எந்த விதமான சமாதானப் பேச்சுக்களையும் இனிமேல் நடத்தப்போவதில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

லண்டன் புறப்படுவதற்கு முன்னர் முஸ்லிம் சமூகத்தினரின் பிரதிநிதிகள் மத்தியில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அலரிமாளிகையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஜனாதிபதி பேசுகையில் -

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## வேலையாள்கள் தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவம் வாய்ந்த
வேலையாள்கள் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

சிறீ ரெக்ஸ் அன் ரெயிலேர்ஸ்
73, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம். (C/13165)


# சிறுவர், கர்ப்பிணிகளின் போஷாக்கை மேம்படுத்த விசேட நிகழ்ச்சித் திட்டம்

## நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் அமுல்

வலி.கிழக்கு,ஒக்.2

நல்லூர் பிரதேச செயலர்பிரிவில் சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்களின போஷாக்குத் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக இப்பகுதிகளில் போஷாக்குக் கல்வி நிகழ்ச்சித் திட்டம் ஒன்று அமுல் செய்யப்பட்டு வருகின்றது.

நல்லூர் பிரதேச செயலகத்தின் ஊடாக திட்ட அமுலாக்கல் அமைச்சின் அனுசரணையுடன் இந்தப் போஷாக்குக் கல்வி நிகழ்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

முன்பள்ளி ஆசிரியர்கள், இளைஞர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் உறுப்பினர்கள், வளர்ந்தோர், மாணவர்கள் எனப் பலதரப்பட்டவர்களுக்கு தனித்தனியாக இந்த போஷாக்கு கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மக்கள் மத்தியில் போஷாக்கு தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தி கிராம மட்டத்தில் போஷாக்கு நிலையினை உயர்த்துவதற்காகவே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்தார். (ஐ-180)


### நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2000



தேர்தல் மாவட்டம் - 10, யாழ்ப்பாணம்



தமிழினம் தலை நிமிர்ந்து வாழ்ந்திட,
யுத்தம் நிறுத்தப்பட்டு அமைதிநிலை ஏற்பட,
அகதிகளாக்கப்பட்ட மக்கள் இன்னல் நீங்க
தமிழர் விடுதலைக் கூட்டணியின்
முதன்மை வேட்பாளர்
**வீரசிங்கம் ஆனந்தசங்கரி** சட்டத்தரணி
(சிரேஷ்ட உப தலைவர், தமிழர் விடுதலைக் கூட்டணி)
அவர்களை ஆதரியுங்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி X

| 1 | X | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | 12 | | | | | | | | |

(78910)


# தொடரும் பெரு மழையால் வன்னியில் மக்கள் பாதிப்பு

வவுனியா,ஒக்.2

வன்னிப் பெருநிலப்பரப்பில் தற்சமயம் பெய்யும் தொடர் மழையால் இடம்பெயர்ந்துள்ள மக்கள் பெரும் இன்னல்களை எதிர்நோக்கியுள்ளனர் என வவுனியாவுக்குக் கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

வன்னியில் இடம்பெற்ற ராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கானவர்கள் சிறு சிறு குடிசைகளை அமைத்துத் தங்கியிருந்தனர்.

இவ்வாறு அமைக்கப்பட்ட குடிசைகள் பல மழை காரணமாக சேதம் அடைந்ததால் மக்கள் அவற்றில் குடியிருக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பெரு வெள்ளம் காரணமாகப் பரவிவரும் தொற்றுநோய்களால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தொடரும் மழை காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும்-

அவர்களுக்கு உதவிகள் வழங்க வேண்டும் என்றும் -

பொது அமைப்புகள் பல அரச அதிபரைக் கோரியுள்ளன.(உ-3-ரி)

## ஹிஸ்புல்லாவின் வாகன அணி மீது சூடு!

# காயமடைந்த 3 பொலீஸாரும் கவலைக்கிடமான நிலையில்!

கொழும்பு,ஒக்.2

நேற்று மட்டக்களப்பில் கோரகல் லிமடுப் பகுதியில், பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா பயணம் செய்த வாகனத் தொடர் அணி மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட தாக்குதலில் படுகாயமடைந்த மூன்று பொலீஸாரின் நிலையும் கவலைக்கிடமாக உள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

மேற்படிப் பொலீஸார் மூவரும் மேல்திகச் சிகிச்சைகளுக்காக கொழும்பு ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

சம்பவத்தின்போது காயமடைந்த மற்றைய இரு பொலீஸாரும் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருவதாக அந்தச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

(உ-8)


### நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்
2000-10-10



யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்
தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளரான
தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச்
சங்கத் தலைவர்
**திரு.சி.சிவமகாராசா.**
அவர்களை ஆதரியுங்கள். இல. 11



தமிழர் விடுதலைக் கூட்டணி X

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| X | 12 | | | | | | | | |

உதயசூரியன் சின்னத்திற்கு நேரே புள்ளடியிட்டும் இலக்கம் 11க்கு மேலே
புள்ளடியிட்டும் வெற்றிபெறச் செய்வதுடன் மேலும் விரும்பிய
இரு இலக்கத்திற்கு மேல் புள்ளடியிடஎம்.

(78902)


## சாவகச்சேரியிலிருந்து

# மக்கள் வங்கிக் கிளையின் ஆவணங்களும் பணமும் மீட்பு!

தென்மராட்சி,ஒக்.2

சாவகச்சேரியில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையின் ஆவணங்கள் நேற்று அந்த வங்கி அதிகாரிகளினால் மீட்கப்பட்டன.

வங்கி அதிகாரிகள் கொடிகாமம் பாதை ஊடாக அங்கு சென்று ஆவணங்களை எடுத்து வந்தனர்.

அங்கு விட்டுவந்த பணம் மற்றும் முக்கிய கோவைகள் அனைத்தையும் எடுத்து வந்ததாக வங்கி அதிகாரிகள் தெரிவித்தனர்.

வங்கிக் கட்டடம் சேதம் அடைந்திருந்தபோதும் உடைமைகள் பெருமளவில் சேதமடையவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றின் அதிகாரிகள் நேற்றுமுன்தினம் சாவகச்சேரிக்குச் சென்று தமது வங்கிகளின் ஆவணங்களை மீட்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(இ-3-11)


### பொதுத் தேர்தல் 2000 - யாழ்.மாவட்டம்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் அதிபர்,
வடமாகாண அதிபர் சங்க முன்னாள் தலைவர் (79 - 88)
கல்வியாளர் க.அருணாசலம் (இல.6)
அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகராக முன்வந்துள்ளார். உடனடியாக யுத்தத்தை நிறுத்தி
மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தைகளைக் கோர, தமிழரின் பாரம்பரிய நிலத்தைப் பேண,
தமிழர் உரிமையைப் பெற,
குமார் பொன்னம்பலத்தின் சேவையைத் தொடர அவருக்கு வாக்களியுங்கள்



மாமனிதர்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் X

க.அருணாசலம் இல. 6



க.அருணாசலம்

| 1 | 2 | 3 | 4 | 5 | X | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

(78903)



### நாகம்ஸ்
(சுன்னாகம்)
விஜய், சிம்ரன்,
மணிவண்ணன்
நடிப்பில்
**துள்ளாத மனமும் துள்ளும்**
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)

### ராஜா
(யாழ்ப்பாணம்)
கார்த்திக், ரோஜா,
அஜித்
மற்றும் பலரின் நடிப்பில்
**உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்**
காட்சிகள்: 10.30, 2.00 (பு.நே)



### சுயேச்சைக் குழு - இல. 3 (ஸ்ரீ.சு.கட்சி)



14

நிம்மதியான வாழ்க்கை திரும்ப,
தரகரின்றி சந்திரிகாவுடனும், அரசுடனும் பேச,
வல்லமையுடைய எம்மை, வெற்றி பெறச் செய்ய
உங்கள் வாக்கு, தொலைபேசிக்கே!



2

திரு.வேல்முருகு தங்கராசா
(அ.இ.ச.நீதிவான்)
(ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்திய குழு உறுப்பினர்,
யாழ்.மாவட்ட ஸ்ரீலங்கா சு.கட்சி பிரதம அமைப்பாளர்.)

X

திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி (அ.இ.ச.நீதிவான்)
(யாழ். இடைக்காடு மகாவித்தியாலய பழைய மாணவன்,
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிரதம அமைப்பாளர், கோப்பாய்,
கொழும்பு தமிழ்ச் சங்கக் கல்விக்குழுச் செயலாளர்)

(78908)

### புறப்படும்போது ஒரு சக்கரத்தை இழந்ததால்

# 97 பேருடன் கிளம்பிய விமானம் அவசரமாகத் தரையிறங்கியது!

சென்னை,ஒக்ரோபர்2

**சென்னை விமான நிலையத்தில் இருந்து 97 பேருடன் புறப்பட்டுச் சென்ற விமானத்தில் ஒரு சக்கரம் இல்லாதது கண்டுபிடிக்கப்பட்டதால் அந்த விமானம் மீண்டும் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது. இந்தச் சம்பவத்தை தொடர்ந்து இந்திய விமான சேவைகள் குறித்துக் கடுமையான விமர்சனங் கள் எழுந்துள்ளன.**

இந்தியன் எயர் லைன்ஸின் சகோதர நிறுவனமான அலையன்ஸ் எயர் நிறுவனத்துக்குச் சொந்தமான விமானம் ஒன்று 93 பயணிகள் மற்றும் 4 பணியாளர்களுடன் நேற்றுக் காலை 6மணிக்கு சென்னை விமான நிலையத்திலிருந்து அந்தமானின் போர்ட் பிளேயருக்குக் கிளம்பிச் சென்றது.

விமானம் ஓடுபாதையில் ஓடி மேலெழுந்து பறக்க ஆரம்பித்த போது விமானி விமானத்தின் ஒரு சக்கரம் இல்லாது இருந்ததை உணர்ந்தார்.

இந்த நிலையில் தரையிறக்கினால் விமானத்தின் எரிபொருள் தாங்கியில் தீப்பிடிக்கும் அபாயம் இருந்ததால் சுமார் 90 நிமிடங்கள் வானத்தில் வட்டமடித்து எரிபொருளை ஆபத்தற்ற அளவிற்குக் குறைத்த பின்னர் விமானி விமானத்தைத் தரையிறக்கினார்.

கடந்த 7 நாள்களில் சென்னை விமான நிலையத்தில் கோளாறு காரணமாக அவசரமாகத் தரையிறக்கப்பட்ட 2ஆவது விமானம் இதுவாகும்.

சமீபத்தில் பாட்னாவில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பலியான விமான விபத்து மற்றும் தற்போதைய சம்பவங்களைத் தொடர்ந்து இந்திய விமான சேவைகள் குறித்து கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன.

# ராஜீவ் கொலைச் சதி குறித்து கோடிக்கரையில் விசாரணை!

தமிழகத்தின் கோடிக்கரைப்பகுதியில் ராஜீவ் கொலை குறித்து விசாரிக்கும் மத்திய பல்முனைக் கண்காணிப்புக்குழு கடந்த சில நாள்களாகத் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகக் கூறப்படுகிறது.

கடந்த மாதம் 25ஆம் திகதியிலிருந்து விசாரணைகளை நடத்தி வரும் கண்காணிப்புக்குழு அங்கு வசித்து வரும் இலங்கைத் தமிழர் ஒருவரை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

ராஜீவ் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு சிறப்புப் புலனாய்வுக் குழுவின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்த சமயம் தப்பிச் சென்று தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்பட்ட கோடிக்கரை மிராசுதாரர் சண்முகத்தின் நெருங்கிய உறவினர்களிடமும் விசாரணைகள் நடைபெற்றுள்ளன.

ராஜீவ் கொலை தொடர்பான பின்னணி குறித்து விசாரணை நடத்திய நீதிபதி ஜெயின் விசாரணைகளை மேற்கொள்ள மத்திய பல்முனை கண்காணிப்புக் குழுவை நியமித்திருந்தார்.

உலக அரங்கில்

ராஜீவ் கொலையில் சதி, வெளிவராத தகவல்கள் குறித்தும் சந்தேகத்துக்குட்பட்ட உள்நாட்டுத் தலைவர்கள் தொடர்பாகவும் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.(ஒ-8)

# முஸ்லிம் திருமணச் சட்டங்கள் இந்தியாவில் மறுபரிசீலனை

### மகளிர் அமைப்பு வரவேற்பு

முஸ்லிம் சமூகத்தினரிடையே உள்ள 3முறை 'தலாக்' எனக் கூறி விவாகரத்துப் பெற்றுக்கொள்ளும் மரபு குறித்து மறுபரிசீலனை செய்ய இந்திய இஸ்லாமியத் தனிச்சட்ட வாரியம் முடிவு செய்திருப்பதை மகளிருக்கான தேசியக்குழு வரவேற்றுள்ளது.

அத்துடன் இஸ்லாமியத் திருமணங்களும் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும் என்றும் -

விவாகரத்துச் செய்யப்படும் பெண்களுக்கு 'இகாத்' எனப்படும் காலத்தின் பின்னரும் ஜீவனாம்சத் தொகை வழங்கப்பட வேண்டும் என்றும் -

சட்ட வாரியத்துக்கு தேசியக் குழு பரிந்துரை செய்துள்ளது. இஸ்லாமியத் திருமணச் சட்டங் களின் படி, மனைவியை விவாகரத்துச் செய்வது இலகுவாக உள்ளதாகவும் -

விவாகரத்தான பெண்களுக்கு குறிப்பிட்ட காலம் மட்டுமே ஜீவனாம்சம் வழங்கப்படுவதாகவும் -

இதனால் இஸ்லாமியப் பெண்களுக்கு பாதுகாப்பு கிடைக்காமலிருப்பதாகவும் மகளிருக்கான தேசியக் குழு குரல் எழுப்பி வருவது குறிப்பிடத்தக்கது.

(ஒ-8)

### இந்தியாவில் புதிய நிறுவனம்

இந்திய அரசின் தொலைத் தொடர்புத்துறை நேற்று முதல் பாரத் சஞ்சார் நிகாம் என்ற பெயருடன் பங்குடமை நிறுவனமாக இயங்கத் தொடங்கியுள்ளது. இந்தியாவில் அரசுத்துறை ஒன்று பங்குடமை நிறுவனமாக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

# பாகிஸ்தானியப் படைகள் நிகழ்த்திய படுகொலைகள் மறக்க முடியாதவை!

### பங்களாதேஷ் அமைச்சர் குமுறல்

யுத்தகாலத்தில் பாகிஸ்தான் படைகள் நிகழ்த்திய படுகொலைகள் மறக்க முடியாதவை என்று பங்களாதேஷின் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்துல் சமத் அஸாத் தெரிவித்துள்ளார்.

1971ஆம் ஆண்டு பங்களாதேஷ் பாகிஸ்தானிலிருந்து பிரிந்து தனி நாடாக உருவான சமயத்தில் இடம் பெற்ற துக்க சம்பவங்களை மறந்து விடும்படி பாகிஸ்தான் கூறியிருந்தது தொடர்பாக செய்தியாளரிடம் கருத்துத் தெரிவிக்கையில் அஸாத் இவ்வாறு கூறினார்.

போர்க் குற்றவாளிகளை பாகிஸ்தான் விசாரணைகளுக்கு உட்படுத்த வேண்டும் என்றும் -

நடந்த சம்பவங்களுக்கு அது மன்னிப்புக் கோர வேண்டும் என்றும்- அஸாத் மேலும் கோரினார்.

### ரஷ்ய அதிபர் இந்தியா விஜயம்

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் 4 நாள்கள் அரசுமுறை விஜயமாக இன்று இந்தியா வருகின்றார்.

### உலக உளநல நாள் ஒக். 10

# நலம் தரும் நடவடிக்கைகள்

### 2. மனந்திறந்து கதைத்தல்



எம்மில் பலர் பிரச்சினைகளுக்குள் மூழ்கியும், அவற்றால் தனிமைப்பட்டும் இருக்கிறோம். இன்னொருவரோடு எமது உணர்ச்சிகளைப் பகிர்ந்து கொள்வது நல்லது.

நீங்கள் அப்படிச் செய்தால் என்ன?

### காஸா கலவரத்தைத் தடுக்க

# இஸ்ரேலிய இராணுவத்துடன் பலஸ்தீன அதிகாரிகள் பேச்சு!

காஸா,ஒக்.2

காஸாவிலும் மேற்குக் கரைப் பகுதியிலும் கடந்த சில தினங்களாக இஸ்ரேலிய இராணுவத்தினருக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள மோதல்களை முடிவுக்குக் கொண்டுவர இஸ்ரேலிய இராணுவத்தின் உயர் அதிகாரிகளுடன் பலஸ்தீன அதிகாரிகள் பேச்சு நடத்தி வருகின்றனர்.

புனிதத் தலம் ஒன்றில் வழிபடும் உரிமை தொடர்பான சர்ச்சை, பெரும் மோதலாகப் பரவியதில் காஸாவில் 5பேரும், மேற்குக்கரைப் பகுதியில் 10பேருமாக 15பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 500 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

இந்த மோதல்களையடுத்து இரு தரப்புத் தலைவர்களின் ஆலோசனைப்படி பேச்சுவார்த்தை நடப்பதாகக் கூறப்படுகிறது.

இஸ்ரேலியப் பிரதமர் எகுட் பராக்கும், பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தும் மேற்கொண்டுள்ள சமாதான முயற்சிகளை இரு தரப்பினரிடையேயான இத்தகைய மோதல்களும், உயிரிழப்புகளும் சீர்குலைக்கக்கூடும் என கவலை தெரிவிக்கப் படுகிறது.

(ஒ-8)

# தைவானுக்கு பாரிய ஆயுத விற்பனை; அமெரிக்காவுக்கு சீனா எச்சரிக்கை!

பெய்ஜிங்,ஒக்.2

தைவானுக்கு ஆயுதங்களை விற்கும் முடிவை அமெரிக்கா செயற்படுத்தினால் கடும் விளைவுகளை அது எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்று சீன வெளிவிவகார அமைச்சர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சுமார் 130 கோடி டொலர்கள் பெறுமதியான ஆயுதங்களை தைவானுக்கு விற்க அமெரிக்கா முடிவு செய்துள்ளதாகவும் -

இவற்றில் ஏவுகணை எதிர்ப்புப் போர்க்கப்பல்கள், ஏவுகணைகள் போன்ற பாரிய ஆயுத தளபாடங்கள் அடங்கும் என்றும் தெரிவித்துள்ள சீன வெளிவிவகார அமைச்சர், அமெரிக்காவின் ஆயுத விற்பனை முடிவு சீனாவின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடும் செயல் என்றும் தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக தைவான் சீனாவின் ஒரு பகுதி என்றும், அதனால் அந்த நாடு சீன அரசின் கீழ் இணையவேண்டும் என்றும் சீனா கூறி வருகிறது. ஆனால் தைவான் இதனை முற்றாக நிராகரித்து வருகிறது.

(ஒ-8)

# மதுரையில் நடக்கும் மாநாட்டில் தமிழர் விடிவுக்கு வழி காணப்படும்!

### பழ. நெடுமாறன் அறிவிப்பு

மதுரை,ஒக்.2

உலகெங்கும் வாழும் தமிழ் தேசிய இனத்தின் விடிவுக்கு வழி காண்பது குறித்து இன்று மதுரையில் நடைபெறும் தமிழர் தேசிய இயக்கத்தின் மாநில மாநாட்டில் ஆராயப்பட உள்ளது.

மேற்படி இயக்கத்தின் தலைவர் பழ.நெடுமாறன் மாநாடு தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசும் போது இதனை அறிவித்தார்.

தமிழ் மண்ணில் ஆக்கிரமிப்புச் செய்யும் இலங்கை இராணுவத்தை எதிர்த்துப் போராடிவரும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் சுதந்திரத் தமிழீழம் அமைக்கும் போராட்டத்துக்கு தமிழ்நாட்டு மக்களின் ஒட்டுமொத்த ஆதரவைத் திரட்டுவது குறித்து மாநாட்டில் திட்டமிடப்படும் என்றும் நெடுமாறன் தெரிவித்தார்.

தமிழர் தேசிய இயக்கத்தின் மாநில மாநாட்டில் தமிழீழ விடுதலை ஆதரவாளர்களும், ம.தி.மு.க. உள்ளிட்ட தமிழ் இனநல அமைப்புகளும் பங்கேற்க உள்ளதாகவும் பழ.நெடுமாறன் செய்தியாளர்களிடம் பேசும் போது மேலும் தெரிவித்தார்.

(ஒ-8)

# பிரதமர் மீது கருணாநிதி அதிருப்தி!

மத்திய அமைச்சரகப் பொறுப்புகளில் பிரதமர் வாஜ்பாய் மாற்றங்களை ஏற்படுத்தியது தொடர்பாக தி.மு.க. அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து செய்தியாளர்களிடம் தி.மு.க. தலைவரும், தமிழக முதல்வருமான கருணாநிதி கூறுகையில்-

தி.மு.கவின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும், மத்திய அமைச்சருமான முரசொலி மாறன் புதுடில்லியில் இருந்த போதும், அவருடன் தி.மு.கவைச் சேர்ந்த மத்திய இணை அமைச்சர் ஏ.ராஜாவின் இலாகா மாற்றம் குறித்து பிரதமர் வாஜ்பாய் கலந்தாலோசிக்கவில்லை என்றும்-

பிரதமரின் இத்தகைய நடவடிக்கை தி.மு.கவுக்கு கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

பா.ஜ.கவுடன் கூட்டணி ஏற்பட்ட பின்னர் கருணாநிதி பகிரங்கமாக பிரதமருடன் கடும் போக்கைக் கடைப்பிடிப்பது இதுவே முதல் தடவை எனக் கூறப்படுகிறது.

(ஒ-8)




சுரேஸ் பிரேமச்சந்திரன்

தமிழ் மக்களை வதைக்கும்
அவசரகாலச் சட்டத்தை இல்லாதொழிக்க
தோடம்பழச் சின்னத்துக்கு வாக்களியுங்கள்.

| | | |
|---|---|---|
| சுயேச்சைக் குழு - 1 | | X |
| த.நித்தியானந்தம் | இல. | 5 |

ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஸ் தலைமை)



த.நித்தியானந்தம்
இல:- 5

(78905)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி உதவி அதிபர்

## சுந்தரம் யோகானந்தா

(இ. அ. சேவை 2— ii)

அவர்கள் அமரராகி விட்டார்.

அன்னாரின் இழப்பால் துயருறும் மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் கழகம்,**
**யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.**

(78987)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் உப-அதிபர்

திருமதி உமாதேவி யோகானந்தா

அவர்களின் அன்புக் கணவர்

## அமரர்
## சுந்தரம் யோகானந்தா

(உப அதிபர், யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)

அவர்களின் மரணச் செய்திகேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
யா/நீர்வேலி சி. சி. த. க. பாடசாலை.

(78988)

# மரண அறிவித்தல்கள்

## சுந்தரம்பிள்ளை பொன்னம்பலம்

(S.S P. காரைநகர்)

தன்னை, களபூமி காரைநகரைப் பிறப்பிடமாகவும், தற்பொழுது 57, ஐயனார் கோயில் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சுந்தரம்பிள்ளை பொன்னம்பலம் அவர்கள் நேற்று (01-10-2000) காலமானார்.

அன்னார் வள்ளியம்மையின் அன்புக் கணவரும், ஞானமலரின் (ஆசிரியை, தியாகராசா மத்திய மகா வித்தியாலயம், காரைநகர்) அன்புத் தகப்பனாரும், ந. சிவராசா (சிறிமாதவன், யாழ்.) வின் அன்பு மாமனாரும், மார்க்கண்டு, பொன்னுத்துரை ஆகியோரின் அருமைச் சகோதரனும, சுஜரூபன், கௌரிசங்கர், நிமலன், வைகுந்தன், நிசாந்தன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(2-10-2000) திங்கட்கிழமை காலை 8-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
ந. சிவராசா (மருமகன்)
சி. ஞானமலர் (மகள்).

57, ஐயனார் கோயில் வீதி,
(கங்காதரன் வைத்தியசாலை முன்பாக)
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (சி/13162)

## இராசலிங்கம் குணராசா

மானிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வே. க. இராசலிங்கம்—மனோன்மணி தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற திசைவீரசிங்கம்—மகேஸ்வரியின் மருமகனும் கனகலிங்கம்பிள்ளை அன் சன்ஸ் உரிமையாளருமானகுணராசா அவர்கள் நேற்று (1-10-2000) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் சுகிர்தலட்சுமியின் அன்புக் கணவரும், சிவானந்தராசா, செந்தில்ராசா, தயா - ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சிவஞானாம்பிகை, சுந்தரலிங்கம், காலஞ்சென்ற பேரானந்தம், துரைரட்ணம், புஸ்பம், பரம்சோதி ஆகியோரின் சகோதரரும், ஜெயலட்சுமி, தவலட்சுமி, தவராஜசிங்கம், கிருபாலட்சுமி, கமலவேணி, திருக்கைலாயவாசன், யோகலட்சுமி, குவக்குமார், லோகநாதன், குகதாஸ், சுவேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 4- 10- 2000 புதன்கிழமை மாலை 4. 30 மணிக்கு இலக்கம் 64, மெசஞ்சர் வீதி, கொழும்பு-12 லிருந்து கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு மாலை 5. 00 மணிக்கு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அன்னாரின் துக்க அனுஷ்டிப்பு 4- 10- 2000 புதன் கிழமை "வசந்தம்" மானிப்பாயில் நடைபெறும்.

தகவல்:
திருமதி கு. சுகிர்தலட்சுமி
(மனைவி)
பிள்ளைகள்

64, மெசஞ்சர் வீதி,
கொழும்பு-12.
T. P. 434703 (சி/13163)

# விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 2

நீர்வேலி மாசிவன் சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றமோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்தார். மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவரும் சிறுப்பிட்டி தெற்கைச் சேர்ந்தவருமான தளையசிங்கம்சுதாகரன் (வயது 33) என்பவரே காயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-15).

# செயன்முறைப் பரீட்சை

தென்மராட்சி, ஒக். 2

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய மாணவர்களுக்கான சங்கீதம், மனையியல் ஆகிய பாடங்களுக்குரிய செயன்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 7ஆம் 8ஆம் திகதிகளில் கரவெட்டி யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் சங்கித பாடச் செயன்முறைப் பரீட்சையும், 8 ஆம் திகதி மனையியல் பாட செயன்முறைப் பரீட்சையும் நடைபெறுமென வித்தியாலய அதிபர் கு. சிவானந்தம் அறிவித்துள்ளார்.

(இ-117)

# உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 2

அராலி வடக்கு இளைஞர் கழகம் நடத்தும் ஏழு பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் ஆட்டங்கள் யாவும் நாளை செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை அராலி இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் என கழகத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (இ-8)

# மின்னல் தாக்கி வீடு சேதம்

நெல்லியடி, ஒக். 2

இடி மின்னல் தாக்கியதில் வீட்டின் ஒரு பகுதி சேதமானது. மின்சார வயர்கள் எரிந்து நாசமடைந்தன. எனினும் அவ்வேளை வீட்டில் நித்திரை செய்து கொண்டிருந்தவர்கள் மயிரிழையில் உயிர் தப்பினர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8.45 மணியளவில் வல்வை வன்னிச்சி அம்மன் கோயிலடிப் பகுதியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சி. சரஸ்வதி என்பவரின் வீடே இடிமின்னல் தாக்கிச் சேதமடைந்தது. (இ-109)

# புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

வவுனியா, ஒக். 2

கடந்த மாதம் 23 ஆம் திகதி மன்னார்ப் பகுதியில் படையினருடன் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் கப்டன் ரெட்டி அல்லது பாஸ்கரன் (ஆறுமுகம் ஆனந்தராசா - வவுனியா) என்பவர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் நேற்றுக் காலை 'புலிகளின் குரல்' வானொலி மூலம் அறிவித்தனர்.

(ஐ-8)

★ ★ ★

வவுனியா, ஒக். 2

'ஓயாத அலைகள் — 4' நடவடிக்கையின் போது சிறப்பு எல்லைப் படை வீரர் 2 ஆம் லெப்டினன்ட் இனியன் (கந்தசாமி தங்கேஸ்வரன் — கிளிநொச்சி), கப்டன் அருளப்பன் (தேவசகாயம் அன்ரன் யூட் தேவரஞ்சன் யாழ்ப்பாணம்) ஆகியோர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் அறிவித்தனர்.

(ஐ-8)

# நவராத்திரி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 2

உரும்பிராய் ஞானவைரவர் சுவாமி கோயில் நவராத்திரி விழா நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் ஐந்தாம் திகதி வரை மூன்று நாள்கள் நடைபெறவுள்ளன.

ஆலய மண்டபத்தில் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் பேராசிரியர் வ. ஆறுமுகம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் சைவப்புலவர் சி. நந்தகுமாரின் சமயச் சொற்பொழிவு மூன்று நாள்களும்தொடர்ந்து இடம்பெறும்.

(9-15)

★ ★ ★

புன்னாலைக்கட்டுவன், ஒக். 2

புன்னாலைக்கட்டுவன் கணேசா முன்பள்ளி மாணவர்களின் வாணிவிழா நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு விக்னேஸ்வரா மணிமண்டபத்தில் கணேசா சனசமூக நிலையத் தலைவர் நா. திருநாவுக்கரசு தலைமையில் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் விசேட பூசை மற்றும் சிறுவர்களின் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன.

(ஐ-9-133)

★ ★ ★

புன்னாலைக்கட்டுவன், ஒக். 2

புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் வாணிவிழா எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் எஸ். சிவகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் இடம்பெறும் விசேட பூசைவழிபாடு மற்றும் கூட்டுப் பிரார்த்தனையைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

(ஐ-9-133)

★ ★ ★

புன்னாலைக்கட்டுவன், ஒக். 2

புன்னாலைக்கட்டுவன், ஆயக்கடவை அருள்மிகு சித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் நவராத்திரி விழாவை முன்னிட்டுத் தினமும் மாலை நேரத்தில் 'இராமாயணம்' என்ற தலைப்பில் செஞ்சொல் வாருதி கேதீஸ்வரனின் சொற்பொழிவு இடம்பெற்று வருகிறது.

தொடர்ந்து நவராத்திரி பாமாலையும், பஜனையும் நடைபெறுகின்றது.

(ஐ-9-133)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக். 2

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் நவராத்திரி விழா நாளை மறுதினம்புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு மாவட்ட நீதிவான் பா. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்வுள்ளன.

(ஐ-10-15)

★ ★ ★

கொழும்புத்துறை, ஒக். 2

தொல்புரம் பத்தானையம்பதி அருள்மிகு ஸ்ரீ ஞானவயிரவர் திருக்கோயிலில் நவராத்திரி விசேட அபிஷேக, பூசை, ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெறுகிறது.

தினமும் ஆயுர்வேத டாக்டர் க. லோகேஸ்வரன் தலைமையில் நாடு நலம்பெற மக்கள் மன நிம்மதியுடன் வாழ இறை ஆசிவேண்டி மாலை 5 மணி தொடக்கம் 6 மணி வரை பஜனை-கூட்டுப் பிரார்த்தனை வழிபாடுகள் இடம்பெறுகின்றன.

(9-30)

★ ★ ★

கொழும்புத்துறை, ஒக். 2

வட்டுக்கோட்டை தெற்கு. நாவலடி அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தில் நவராத்திரிபூசை ஆரம்பமாகி விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெற்று வருகின்றது.

தினமும் பூசை முடிவில் குமரகுரு பரசுவாமிகள் அருளிச் செய்த "சகல கலாவல்லி பாமாலை" பத்துப் பாடல்கள் பாடப்படும்.

(9-30)

★ ★ ★

கொழும்புத்துறை, ஒக். 2

அராலி, கரைப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ கணபதீஸ்வரன் திருக்கோயிலில் நவராத்திரி விழா தினமும் விசேட அபிஷேகம், கொலுபூசை, பூசை ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெறும்.

மானம்பூத் திருவிழா எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறும்.

(9-30)

★ ★ ★

கொழும்புத்துறை, ஒக். 2

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நவராத்திரி விழா ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பராமாச்சார்ய சுவாமிகள் தலைமையில் தினசரி மாலை 5மணிக்கு விசேட பூசை, ஆராதனை வழிபாடுகளுடன் கொலுபூசையும் தினசரி நடைபெற்று வருகிறது.

விஜயதசமி தினமான எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் ஆதீன சுவாமி தலைமையில் ஏடு துவக்கும் நிகழ்வும் இடம்பெறும்.

(9-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக். 2

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி நவராத்திரி விழா எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமைநடைபெறும்.

கல்லூரி முதல்வர் க. சிவாஜியின் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கல்லூரி இந்துமா மன்றத்தினால் நடத்தப்பட்ட நவராத்திரி விழா போட்டிகளுக்குரிய பரிசில்கள் வழங்கப்படுவதுடன் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

விழாவின் சிறப்பு விருந்திராக இளைப்பாறிய மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு கலந்து கொள்வார்.

(9-15)

★ ★ ★

கொழும்புத்துறை, ஒக். 2

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாலய நவராத்திரி விழா நாளை திங்கட்கிழமை காலை 8. 30 மணிக்கு அதிபர் தி. கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெறும்.

விசேட பூசை ஆராதனைகளைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் 'சமூகஜோதி' கா. கணேசதாசனின் "அன்னையைச் சரண் புகுந்தால் அதிக வரம்பெறலாம்' என்ற தலைப்பிலான சொற்பொழிவும் இடம்பெறும்.

(9-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக். 2

அல்வாய், வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலய நவராத்திரி விழாவை முன்னிட்டு நாளை செவ்வாய்க்கிழமை விசேட பூசையும், சமயச் சொற்பொழிவும் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமமுதல்வர் சுவாமி சித்ருபானந்தாவின் 'அபிராமி' என்னும் தலைப்பிலான சொற்பொழிவு இடம்பெறும்.

(9-15-117)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக். 2

பருத்தித்துறை வட. இந்து மகளிர் கல்லூரியில் நவராத்திரி விழா இன்று முதல் விசேட நிகழ்ச்சிகளுடன் நடைபெறவுள்ளது.

நவராத்திரி விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடத்தப்படும் கலைப்போட்டிகள், கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றியீட்டுபவர்களுக்கு இறுதி நாள் நிகழ்வன்று பரிசில்கள் வழங்கப்படும்.

(ஐ-15)

# உதயன்

## பாட நூல் விநியோகம்

பாடசாலை மாணவருக்கு அடுத்த ஆண்டுக்குரிய இலவசப் பாட நூல்களை நேரகாலத்துடன் இங்கு எடுத்துவரவும், அந்த வருடத்திற்குரிய தவணை ஆரம்பமாவதற்கு முன்னர் டிசெம்பர் மாதத்திலேயே அவற்றை விநியோகிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

திட்டமிட்டுள்ளவாறு மாணவர்களுக்குரிய பாடநூல்கள் புதிய வகுப்புகள் தொடங்குவதற்கு முன்னரே கிடைக்குமாயின், அது நல்ல முயற்சியாக, பெருங்காரியமாக அமையும். நீண்ட காலத்திற்குப் பின்னர், பல வருடகால இடைவெளியின் பின்னர், மாணவர்களுக்கான கல்விப் போதனையையும் பயிற்சியையும் உரிய காலத்தில் தொடங்குவதற்கான வாய்ப்பும் சூழ்நிலையும் தோன்றும்.

கடந்த சுமார் பத்து வருட காலமாக, அரசாங்கம் வழங்கும் இலவசப் பாடநூல்கள் காலம் பிந்தியே இங்கு கிடைத்து வருகின்றன. தென்னிலங்கையில் உள்ள மாணவர்களுக்கு ஆகப் பிந்தியது, அந்தந்த வருடத்திற்குரிய முதலாந்தவணையின் முதலாவது வாரத்திலேயே பாடநூல்கள் கிடைத்துவிடும். ஆனால் இங்குள்ள மாணவர்கள் அந்தத் தவணை முடியும் வரைக்கும் பாட நூல்களை கண்ணாற் காணாமலே கல்வி கற்கும் பரிதாப நிலையே நீடித்து வருகிறது.

யாழ்ப்பாணத்துக்கான தரைவழிப்பாதை தடைப்பட்டதைக் காரணம் காட்டி, அரசாங்கத்தால் தாமதம் செய்யப்பட்ட, தாமதம் செய்யப்படும் முக்கிய தேவைகளில் மாணவருக்கான பாடநூல் விநியோகமும் ஒன்று. கப்பலில் இடஒதுக்கீடு பெறுவதில் தாமதம் உள்ளதால் உரிய காலத்தில் யாழ்ப்பாணம் கொண்டு வந்து சேர்க்க முடியவில்லை என்று அதிகாரிகள் காரணம் கூறுவது வழமை.

கொழும்பில் உள்ள அதிகாரிகளுக்கோ யாழ்ப்பாண மாணவர்களின் கல்வியில் அக்கறை இல்லை. இங்குள்ள அதிகாரிகளோ, வந்து சேரட்டும் அதன் பின்னர் எமது வேலையைச் செய்வோம் என்ற போக்குடனோ அல்லது நாம் முயற்சி செய்தோம், பல தடவைகள் தொடர்பு கொண்டோம், அதற்கு மேலாக என்ன செய்யமுடியும என்ற அக்கறை குறைந்த தன்மையுடனோ செயற்பட்டனர்.

எல்லாவற்றினதும் விளைவு மாணவருக்குரிய கல்வி போதனை பாதிப்புற்றமையே. அரசாங்கப் படைகள் யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைப்பற்றி - கொழும்பு அரசாங்கத்தின் ஆணை முழுமையாகச் செல்லுபடியாகத் தொடங்கி - சிவில் நிர்வாகம் பூரணமாக நடைபெற ஆரம்பித்து நான்கு வருடங்கள் முடிவுற்ற போதிலும், மக்களின் அன்றாட அவசியத் தேவைகள் பல இன்னும் உரிய அளவில், உகந்த முறையில் பூர்த்தி செய்யப்படவில்லை.

பல வகைக் கால தாமதங்கள், இழுபறிகளின் பின்னர் கடந்த இரண்டொரு மாத காலமாகவே வெளிமாவட்டங்களுக்கான போக்குவரத்துச் சேவை ஓரளவு சீராகி உள்ளது. மக்களுக்குரிய முக்கிய சேவைகளில் ஒன்றான தபாற் சேவை இன்னும் ஒழுங்கானதாக இல்லை. கொழும்பிலிருந்து அனுப்பப்பட்ட யாழ்ப்பாணத்திற்குரிய 600 தபாற் பொதிகள் திருகோணமலையில் தேங்கிக் கிடக்கின்றன!

குடாநாட்டு மக்களில் மிகப் பெரும்பாலானவர்கள் தாமே உழைத்து வருமானம் பெறும் நிலையில் இல்லை. தமது பிள்ளைகள் மற்றும் இனத்தவர்கள் அனுப்பும் பணத்தைக் கொண்டே தமது அன்றாடச் சீவியத்தை நடத்துகிறார்கள். வெளிநாட்டுத் தபால்கள் கிடைக்காதவர்கள் பணம் பெற இயலாமல் கஷ்டப்படுகிறார்கள். தபாற் சேவை ஒழுங்காக நடைபெற்றால் அவர்களுக்கு இந்தக் கஷ்டம் வந்திருக்காது. இவ்வாறாக, சீரின்மைகளையும், தாமதங்களையும் பெரும் பட்டியல் இடலாம்.

பாடநூல்கள் உரிய நேரத்தில், மாணவர்களுக்கு முழுப் பயனளிக்கக் கூடியவாறு வந்து சேர்வதில்லை என்ற சீர்கேடு நீக்கப்படுமாயின், இங்குள்ள கல்விப்பகுதிக்கும் அதன் அதிகாரிகளுக்கும் உள்ள அவப்பெயர் நீங்கும்.

கல்விப் பகுதி இயற்றும் நூல்களை யாழ்ப்பாணத்தில் உள்ள அச்சகங்களில் அச்சிட்டு விநியோகிப்பதன் மூலம் தாமதத்தை நீக்கும் வாய்ப்புக் குறித்து ஆராயப்பட வேண்டும். தாமதத்தை முற்றாக நீக்க அது வழி செய்யும்.

# கொழும்புத்துறை, அரியாலையில் சில பகுதிகளுக்குச் செல்ல அனுமதி

## வீடுகளைப் பார்வையிட மக்கள் ஆர்வம்

அரியாலை,ஓக்.2

கொழும்புத்துறை, அரியாலைப் பகுதிகளில் சில இடங்களுக்குச் செல்ல மக்கள் அனுமதிக்கப்பட்டதை அடுத்து பலரும் தமது வீடுகளைச் சென்று பார்வையிட்டு வருகின்றனர். பெறுமதிமிக்க பொருள்களையும் ஏற்றி வருகின்றனர்.

ஆயினும் இப்பகுதிகளில் சில இடங்களில் உள்ள வீடுகளில் இருந்து பொருள்களை ஏற்றி வருவதற்குப் பொது மக்கள் அனுமதிக்கப்படவில்லை.

கண்டி வீதிக்குக் கிழக்குப்புறமுள்ள 512 ஆவது படைப்பிரிவின் கீழ் உள்ள பகுதிகளுக்குப் பொது மக்கள்செல்லஅனுமதிக்கப்பட்டுள்ளனர். 516 ஆவது படைப்பிரிவின் கீழ் உள்ள - கண்டிவீதிக்கு மேற்குப் புறத்தில் வசிக்கும் மக்கள் வீடுகளைச் சென்று பார்வையிடவோ பொருள்களை எடுத்து வரவோ அனுமதி வழங்கப்படவில்லை.

அத்துடன் 512 ஆவது படைப் பிரிவின் கீழ் உள்ள ஜே - 91, ஜே-92, ஜே-93, ஜே-95 ஆகிய பகுதி கிராம அலுவலர் பிரிவுகளில் மக்கள் மீளக்குடியமர அனுமதி வழங்கப்படும் என்று கிராம அலுவலர்களுக்கு படைத்தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதே சமயம் கொழும்புத்துறை மேற்கு சுவாமியார் வீதி, ஆனந்தன் வடலிவீதி,விபுலானந்தர்வீதி, புங்கன் குளம் வீதி, கணக்கர் சந்திப்பகுதி ஆகிய இடங்களைச் சேர்ந்த குறிப்பிட்ட சில மக்கள் தமது வீடுகளை நேற்று முன்தினம் சென்று பார்வையிட்டுத் திரும்பினர். அத்துடன் பெறுமதியான பொருட்கள் சிலவற்றையும் அவர்கள் கையோடுஎடுத்து வந்ததைக் காணமுடிந்தது.(ஐ-17-86-15)

# ஆட்சிக்கு வந்ததும் புலிகளுடன் ஐ.தே.கட்சி பேச்சை தொடங்கும்

## திருமலையில் ரணில் தெரிவிப்பு

திருகோணமலை,ஓக்.2

இனப்பிரச்சினையால் நாடு சீரழிந்துவிடும். நாம் பதவிக்கு வந்ததும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் அரசியல் ரீதியான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்போம்.

இவ்வாறு நேற்றுமுன்தினம் திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற ஐ.தே. கட்சியின் பொதுப் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கட்சியின் முதன்மை வேட்பாளர் சுஸில்சாந்த ரணவீர தலைமையில் நடைபெற்ற அக்கூட்டத்தில் கட்சியின் சார்பில் திருகோணமலை மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடுகின்ற அனைத்து வேட்பாளர்களும் கலந்து கொண்டனர்.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கூட்டம் நடைபெற்றது.

ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து உரையாற்றுகையில்:-

நாம் ஆட்சிக்கு வந்தால் நாட்டில் வேலைவாய்ப்பின்றி இருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப் படுவதுடன் கணனிப் பயிற்சிகளும் வழங்கப்படும். மாவட்டங்கள் தோறும் பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரிகள் நிறுவப்படும் என்றும் தெரிவித்தார்.

கூட்டம் முற்பகலில் ஆரம்பமாகிய போதும் ரணில் பிற்பகல் 2.30 மணியளவிலேயே கூட்டத்துக்கு வருகை தந்தார். கடும் மழைக்கு மத்தியிலேயே கூட்டம் நடைபெற்றது.

(ஐ-10-150)

## முந்திரிகை விலை வீழ்ச்சி

யாழ்.நகரில் முந்திரிகைப் பழத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

ஒரு கிலோ முந்திரிகைப் பழம் 50 ரூபாவாக விற்கப்பட்டு வருகின்றது. (ஐ-17)

## பரிசளிப்பு விழா

வலிகாமம் தெற்கு,ஓக்.2

இணுவில் மத்திய கல்லூரியின் கல்லூரித் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை காலை பத்து மணிக்கு கல்லூரி திறந்த வெளி அரங்கில் அதிபர் துரைஎங்கரசு தலைமையில் நடைபெறும்.

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் செ.பாலச்சந்திரன் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகவும் யாழ். வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறியியலாளர் இரா. நடராசா சிறப்பு விருந்தினராகவும் சாவகச்சேரி இந்து தேசிய பாடசாலை அதிபர் இ.கயிலைநாதன், ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் ஆறு.திருமுருகன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

திருமதி சத்தியலட்சுமி பாலச்சந்திரன் பரிசுகள் வழங்குவார்.

(ஐ-152)



தென்மராட்சி, யாழ்ப்பாணம் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி மற்றும் வலிகாமம் பகுதிகளில் தங்கியுள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு தென்னிந்திய திருச்சபையின் யாழ். அத்தியட்சாதீனத்தால் மற்றும் ஒரு தொகுதி உடைகள் அண்மையில் வழங்கப்பட்டன.

பாஷையூர், குருநகர் ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து ஆனைக்கோட்டையில் உள்ள ஓ.எல்.ஆர். முகாமில் தங்கியுள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு தென்னிந்திய திருச்சபையின் பேராயர் அதிவண. கலாநிதி எஸ்.ஜெபநேசன் உடைகளை வழங்கிய நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின்போது பேராயர் குழந்தை ஒன்றைத்தூக்கி வைத்திருப்பதைப் படத்தில் காணலாம்.

## அழிவுண்ட நிலையில் சாவகச்சேரி நகரம்

# வங்கிக் கட்டடங்கள் பலத்த சேதம்; இரும்புப் பெட்டி, ஆவணங்கள் தப்பின!

## அங்கு சென்ற அதிகாரிகள் தகவல்

யாழ்ப்பாணம்,ஓக்.2

சாவகச்சேரி நகரில் உள்ள பெரும்பாலான கட்டடங்கள் பலத்த சேதமடைந்து அழிவுண்டு காட்சி தருகின்றன. மக்கள் வங்கிக் கட்டடமும் பலத்த சேதமடைந்துள்ளது. இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கிக் கட்டடங்களும் சேதமடைந்துள்ளன. இலங்கைவங்கிக் கிளையில் இருந்த இரும்புப் பெட்டகம், ஆவணங்கள் என்பன சேதமடையாமல் தப்பிவிட்டன.

நேற்று முன்தினம் சாவகச்சேரி நகரப்பகுதிக்குத் சென்று திரும்பிய வங்கி அதிகாரிகள் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தனர்.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலிருந்து நகரப்பகுதி வரை செல்லும் கண்டி வீதியின் இரு மருங்கிலும் உள்ள வர்த்தக நிறுவனங்கள் மற்றும் கட்டடங்கள்அனைத்தும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

நகரில் உள்ள வங்கிகளில் இருக்கும் ஆவணங்களை மீட்கும் பொருட்டு கொடிகாமம் வீதி ஊடாக நாம் சாவகச்சேரி நகருக்கு அழைத்துச் செல்லப்பட்டோம்.

சாவகச்சேரி நகரமையப்பகுதியில் பெரும்பாலான கட்டடங்கள் பலத்த சேதமடைந்து காணப்பட்டன. ஆஸ்பத்திரிக் கட்டடம் கூரைகள் இல்லாதநிலையில் காணப்படுகின்றது. சாவகச்சேரி பிரதேச செயலகம் சிறிது சேதமடைந்துள்ளது - என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ஐ-5)

## பூதர்மடம் வீதியில் வெள்ளம் தேக்கம்

நீர்வேலி தெற்கு பூதர்மடம் வீதி போக்குவரத்துச் செய்ய முடியாதளவுக்கு சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றது.

இந்த வீதி கடந்த சில வருடங்களாக புனரமைப்புச் செய்யப்படவில்லை.

மாரிகாலங்களில் இந்த வீதியில் வெள்ளம் தேங்கி நிற்பதால் மக்கள் போக்குவரத்துச் செய்யமுடியாது பெரும் சிரமப்பட்டுவருகின்றனர்.

இந்தவீதியை புனரமைப்பு செய்து தருமாறு கடந்த பல வருடங்களாக இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஐ-17)

## இடப்பெயர்வினால் தொழில் இழந்த

# பனை, தென்னைவள கூட்டுறவுச் சங்க பணியாளருக்கு மாற்று வேலை வசதி

அரியாலை,ஒக்.2

யாழ்.மாவட்டத்தில் வன்செயல் காரணமாக இடம்பெயர்ந்துள்ள ஐந்து பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றிய குறிப்பிட்ட எண்ணிக்கையான பணியாளர்கள் இடம்பெயராத பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் தற்காலிகமாகப் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

மாவட்டக் கூட்டுறவுத் திணைக்கள அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த சங்கங்களில் கடமையாற்றிய 110 பணியாளர்கள் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளனர். இவர்கள் சம்பளம் இன்றி அவதிப்படுகின்றனர்.

வேலை இழந்த மேற்படி பணியாளர்கள சுயமுயற்சியில தொழிலை மேற்கொள்ள வசதியாக அவர்களுக்கு முற்பணமாக ஒரு தொகைப் பணம் வழங்கப்பட்டுள்ளது.

நிலைமை சீரடைந்ததும் மீண்டும் இவர்கள் முன்னைய பணியில் அமர்த்தப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

### நாளை

புரட்டாதி 17
செவ்வாய்க்கிழமை
*திதி:* ஷஷ்டி
பின் இரவு 3.40 வரை
*நட்சத்திரம்:* கேட்டை
வைகறை 5.13 வரை
ஷஷ்டி விரதம்
*சுபநேரம்:* 10.32 - 12.02
*ராகுகாலம்:* 3.02 - 4.32
(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

**தனது உழைப்பின் மூலம் அனைவருக்கும் வாழ்க்கைக்குரிய வழியைத் தேடிக் கொள்வதற்கு உரிமையுண்டு. எனவே, ஒரு வழக்கறிஞன் வேலைக்கு எவ்வளவு மதிப்பு உண்டோ, அவ்வளவுக்கு ஒரு நாவிதனின் வேலைக்கும் உண்டு.**

*- காந்தியடிகள்*

# பொதுச் சேவைகள் ஊடாக பண்புகளை வளர்க்கலாம்

## றோட்டரக்ட் நிகழ்வில் உரை

வலிகாமம்தெற்கு,ஓக்.2

"தனியார்துறை ஸ்தாபனங்களில் வேலை வாய்ப்புக்கள் பெறுவதற்கு றோட்டரக்ட், றோட்டரி கழகங்கள் போன்ற அமைப்புக்களின் சான்றிதழ்கள் பெரிதும் உதவியாக உள்ளன. எனவே இதுபோன்ற கழகங்களில் இளைஞர்கள் சேர்ந்து கொள்வது நன்மை தரும். அத்துடன் பொதுச் சேவையூடாக அவர்கள் தன்னம்பிக்கை, தலைமைத்துவம் போன்ற பல பண்புகளையும் வளர்த்துக் கொள்ளமுடியும்"

சுன்னாகம் றோட்டரக்ட் கழக புதிய ஆண்டுக்கான பதவியேற்பு வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்ப்பாணம் றோட்டரக்ட் கழகத் தலைவர் அ.பஞ்சலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

மருதனார்மடம், யாழ்.பல்கலைக் கழக நுண்கலைக் கல்லூரியில் நடைபெற்ற இவ்விழாவில் புதிய தலைவர் ஏ.செல்வேந்திரதாஸுக்கு அ.பஞ்சலிங்கம் தலைவருக்கான சின்னத்தை அணிவித்தார்.

வி.பி சசிவர்ணன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் புதிய தலைவர் உரையாற்றினார்.

வரவேற்புரையை எஸ்.பிரபேஸ் ஜெயக்குமார் நிகழ்த்தினார்.

புதிய தலைவராக ஏ.செல்வேந்திரதாஸ், செயலாளராக வி.பி.சசிவர்ணன் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் பதவியேற்றுக் கொண்டனர்.

## உதவிப் பணத்தை பெறுமாறு அறிவுறுத்து

வலி.கிழக்கு,ஓக்.2

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து வலிகாமம் கிழக்குப் பகுதியில் வசித்து வரும் மாதாந்த பொதுசன உதவிப்பணம் பெறுவோர் கடந்த மூன்று மாதத்திற்குரிய கொடுப்பனவுகளை நல்லூர் உபதபாலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு தபாலக அதிபர் தெரிவித்துள்ளார்.

ஜூன், ஜூலை, ஒகஸ்ட் ஆகிய மூன்று மாதத்திற்குரிய கொடுப்பனவுகளை நல்லூர் உபதபாலகத்தில் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னதாகப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-180)

## ஆஸ்பத்திரிக்கு சக்கர நாற்காலி

கோப்பாய்,ஓக்.2

கோப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு சுகாதார சேவைகள் மாகாணப்பணிமனையினால் சக்கர நாற்காலி, தானியங்கி மின்தார பம்புகள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் 10-10-2000

✪ சென்ற ஆறு ஆண்டுகால அம்மணியார் ஆட்சியில் 50 ஆண்டு காலத் தமிழர் உரிமைப் போரை நிறுத்தக் கூடிய அரசியல் தீர்வு இல்லை.

✪ 1987இன் இந்திய-இலங்கை ஒப்பந்தம் இனப்பிரச்சினைக்குத் தீர்வாகாது என்று 1995 ஒகஸ்ட் 3இல் அம்மையார் ஒரு தீர்வுப் பொதியைக் கொண்டுவந்தார். அதுவும் முழுமையான ஒன்றல்ல.

✪ இத்தீர்வுப் பொதியை ஐ.தே.கட்சி உட்பட பேரினவாத சக்திகள் - பௌத்த பீடங்கள் வழமைபோல் எதிர்த்தன - இன்றைய பிரதமரும் எதிர்த்தார்.

✪ வீணைக்காரர்களோ ஒருபடிமேலே போய் விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்போம்; இந்திய - இலங்கை ஒப்பந்தத்தினால் வந்த, ஆனால் ஜே.ஆரின் வஞ்சனையில் உருவான 13ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டுவாருங்களென அம்மாவிடம் அடம்பிடித்தனர்.

✪ பயந்துபோனார், மருண்டுபோனார் அம்மணி; அந்த அ[illegible]றைத் தீர்வுப் பொதியையே கைவிட்டார்.

❒ பிராந்தியங்களின் ஒன்றியம் (Union of Regions) எ[illegible]தை நீக்கிவிட்டு, மறுபடியும் அரசின் தன்மை 'ஒற்றையாட்சி'த்தன்மைக்கு மாற்றப்பட்டுவிட்டது.

❒ 'அரசகாணிகளின் அதிகாரம் பிராந்தியங்களிடமேயிருக்கும்' (State Land is Vested in the Regions) என்பது நீக்கப்பட்டு மத்தியின் தலையீடும் இருக்கக் கூடிய 'சொரியல்' காணி உரிமை தான் மிஞ்சியிருக்கிறது.

❒ வடக்கு-கிழக்கு மாநிலம் தமிழர் தாயகத்திலிருந்து கிழக்கைப் பிரித்துவிடுமாறு திருமலை, மட்டக்களப்பில் கருத்துக்கணிப்பு (Referendum) நடத்தும் வஞ்சகத் திட்டம்.

✪ மறுபடியும் நாடாளுமன்றத்தின் இறுதி நாள்களில் ஒரு தீர்வுப் பொதி அவசரத்தில் ஓர் அரைகுறைப் பிரசவம் - பேரினவாதம் பெற்ற அங்கவீனக் குழந்தை.

✪ இப்பொதி தமிழினப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு அல்ல. விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைக்க வல்லதல்ல - போரை நிறுத்தக்கூடியதுமல்ல - அமைதிக்குப் பதில் அழிவையே இக் குழந்தை கொண்டுவரப்போகிறது என்று எதிர்த்து நின்றது தமிழர் விடுதலைக் கூட்டணி.

✪ சமாதானத்துக்கான போர் என்று தமிழ் மக்களை அழிக்கும் போரை, இராணுவத் தீர்வை முன்னெடுக்கவும் தெற்கில் தேர்தலில் வெற்றியைப் பெறவும் தமிழர் தாயகத்து மண்ணைக் கைப்பற்றும் இப்போரை நிராகரிக்கிறது; எதிர்க்கிறது த.வி.கூட்டணி.

✪ ஆனால் ஆகா! இந்தப் பொதிக்குழந்தையைத் தத்தெடுத்துக் கொள்கிறோம். தமிழருக்கு நல்லது, அழகானது என்று வீணை வாசிக்கிறது இங்கே ஒரு கூட்டம். வன்னியை விட்டு யாழ்ப்பாணத்தில் நங்கூரமிட்டு நிற்கிறது இன்னொரு கூட்டம். இப்படி இன்னும் சில.

✪ இந்த வாணிபக் கூட்டத்துக்கு அம்மணி அரசு ஆள்கள் கொடுத்துவரும் பரிசுகள் ஏராளம், ஏராளம்!

**இவ்வியாபாரக் கூட்டங்களை நிராகரித்துவிட்டு கொள்கை வழிநிற்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தமிழ் மக்கள் வெற்றி பெறச் செய்யவேண்டும்.**

(C/13145)

## உதய சூரியனுக்கே வாக்களியுங்கள்

## தமிழர் விடுதலைக் கூட்டணி

X

# யாழ்ப்பாணத்தில் தேர்தல்: உரிமைகளுக்கும் சலுகைகளுக்கும் இடையிலான ஊசலாட்டம்!

யாழ்ப்பாணம் பல வருடங்களுக்குப் பின்னர் தேர்தல் பரபரப்பில் ஆழ்ந்துள்ளது. பரபரப்பென்னவோ அரசியல் கட்சிகளிடமும், சுயேச்சைக் குழுக்களிடமுந்தான். சாமானிய பொதுமக்களின் நிலையோ வேறானது. சாதாரணமாக இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியுள்ள பாமர மக்கள் முதல் படித்தவர்கள் வரை எந்தக் கட்சிக்கு அல்லது குழுவுக்கு வாக்களிப்பது என்பது குறித்து எந்தவித தீர்மானமும் இல்லை. 'அந்த நேரம் பார்ப்போம்' என்ற பதிலையே சந்திக்கும் பலரிடமிருந்தும் கேட்க முடிகிறது.

வழக்கம்போலவே தேர்தல் சுவரொட்டிகள் அங்கிங்கெனாதபடி எங்கும் ஒட்டப்பட்டுள்ளன. திருமணத்துக்காக அண்மையில் வர்ணம் தீட்டிய மதில்களெல்லாம் கூட இவற்றால் அசிங்கப்படுத்தப்பட்டன. கேட்ட இடங்களில் சில 'ஜனநாயகக் கட்சிகள்' மிரட்டவும் தலைப்பட்டன. அதுமட்டுமல்ல சுவரொட்டிகள் கிழிக்கப்பட்ட சம்பவங்களும், அதைத் தொடர்ந்து உள்ளூர் கட்சித் தலைவர்களிடையே வாய்த்தர்க்கம் நேரிடமையும் கூட நிகழ்ந்தது. ஒரு பாடசாலை மதிலில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் கிழிக்கப்பட்டன. மீண்டும் மீண்டும் கிழிக்கப்பட்ட இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.அவை சிரேஷ்ட மாணவர்களால் தொடர்ந்து கிழிக்கப்பட்டன. ஒரு கட்சி வந்தது. "நாங்கள் நிறையச் செலவு செய்கிறோம் இந்தச் சுவரொட்டிகளுக்காக. இதைக் கிழிக்காதீர்கள் என்று மாணவர்களிடம் சொல்லிவிட்டு, சுவரொட்டிகளை ஒட்டி விட்டுச் சென்றது. ஒரு பாடசாலையின் மதிலை அசிங்கப்படுத்துகிறோம் என்றோ, அம்மதிலுக்கான செலவு எவ்வளவு என்றோ இக்கட்சிகள் சிந்திக்கவில்லையே என்று கவலை தெரிவித்தார் அப்பாடசாலையின் அதிபர்.

இப்படியெல்லாம் நிகழ்ந்தாலும், சீருடை தரித்தவர்கள் கட்சிகளின் கண்முன்னாலேயே சுவரொட்டிகளைக் கிழிக்கவும், கரி பூசவும் அதைப் பார்த்துக்கொண்டு வாளாவிருந்ததையும் குறிப்பிடவேண்டும்.

எத்தனையோ ஆண்டுகளின் பின்னர் வேட்பாளர்கள் வீட்டுப் படலைகளைத் தட்டுவதைக் காணும் பாக்கியம் மக்களுக்கு வாய்த்திருக்கிறது. அதுமட்டுமல்ல, இடம்பெயர்ந்தோர் முகாம்களை நோக்கி, கட்சிகளைப் படையெடுக்கவும், வாக்குறுதிகளை அள்ளி வீசவும் இத்தேர்தல் வழி சமைத்திருக்கிறது. சில கட்சிகள் இப்போதே மா, சவர்க்காரம் மற்றும் உணவுப் பொருள்களை 'நிவாரணமாக' வழங்கி, அதன் மூலம் வாக்காளர்களைக் கவர, பிரயத்தனப்படுகின்றன.

### தேர்தல் மடல்

அஞ்சல் மூல வாக்காளர் முகவரிகளுக்கும், பாடசாலைகள் மற்றும் அரச நிறுவனங்களின் முகவரிகளுக்கும் துண்டுப் பிரசுரங்களையும் அரசியல் கட்சிகளும் குழுக்களும் அனுப்பி வருகின்றன. ஒரு வீதி வழியே செல்லும் ஒருவர் குறைந்தது மூன்று கட்சிகளின் துண்டுப் பிரசுரங்களையாவது வாங்க நேரிடும். துண்டுப் பிரசுரங்கள் மட்டுமல்ல, 2001 ஆம் ஆண்டுக்கான பொக்கற் கலண்டர்களில் வேட்பாளர்களின் உருவப்படங்கள் பொறித்தும் வழங்கப்படுகின்றன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது சந்திரிகா அம்மையாருக்குக் கள்ள வாக்குப் போடுவதற்கு ஒன்று சேர்ந்திருந்த கட்சிகள் இம்முறை தனித்தனியே போட்டியிடுவது விசேட அம்சமாகும்.

இம்முறை தேர்தலில் சிங்கள இனவாதக் கட்சிகளும் போட்டியிடுகின்றன. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கள்ளும் சாராயமும் அளித்து, ஜனாதிபதி சந்திரிகாவுக்கே வாக்குகளை அளியுங்கள் என அனுப்பி வைக்கப்பட்டோரில் பலர் விடயம் தெரியாது கை போன போக்கில் கிறுக்கியதால், வந்த வினை இனவாதிகளுக்கு நாக்கில் நீர் ஊற, இம்முறை அவர்களும் யாழ்.தேர்தல் களத்தில் குதிக்கிறார்கள்.

இவ்வளவு காலமும் வெளியிடப்பட்ட சுவரொட்டிகள் மற்றும் துண்டுப்பிரசுரங்களை வாசிக்கும் ஒருவர் தமிழ்க்கட்சிகளை இரண்டு வகுதிக்குள் கொண்டுவர முடியும்.

ஒன்று - சலுகைகளை முன்னிறுத்தும் கட்சிகள். மற்றது உரிமைகளை முன்னிறுத்தும் கட்சிகள்.

சலுகைகளை முன்னிறுத்தும் கட்சிகள் கடந்த காலங்களில் தாங்கள் யாழ்ப்பாண மக்களுக்கு என்னென்ன சலுகைகளைப் பெற்றுக் கொடுத்தோம் என்பதைப் பட்டியலிடுகின்றன.

அது மட்டுமல்லாது, இனிமேல் என்னென்ன சலுகைகளை அரசிடமிருந்து பெற்றுத்தருவோம் என்பதையும் எடுத்துரைக்கின்றன. அவ்வகையில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி, சுயேச்சைக் குழுவான ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி),ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பான சுயேச்சைக் குழு, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி என்பன குறிப்பாக சலுகைகளை முன்னிறுத்தும் கட்சிகளாக உள்ளன. தமிழர் விடுதலைக்கூட்டணி உரிமைகள் குறித்தும், சலுகைகள் குறித்தும் ஏறத்தாழச் சம அளவில் பேசுகின்றது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தமிழ்த் தேசிய நிலை நின்று உரிமைகளை முன்னிறுத்தித் தேர்தலில் நிற்கிறது. ரெலோ சார்பான சுயேச்சைக் குழுவும் இதே தன்மையிலேயே தனது பிரகடனங்களை முன் வைக்கின்றது. ஜனநாயக இடதுசாரி முன்னணி தமது கொள்கைகளுக்கு அமைவான விதத்தில் தமிழர் உரிமைகள் குறித்துப் பேசுகிறது. வடக்கு முஸ்லிம்களுக்கான அமைப்பு முஸ்லிம் மக்களின் உரிமைகள் தொடர்பில் தேர்தலைச் சந்திக்கிறது.

ஆக, உரிமைகளுக்கும் சலுகைகளுக்கும் இடையிலான ஒரு களமாக யாழ்ப்பாணத் தேர்தல் களம் பின்னிவிடப்பட்டுள்ளது.

இரண்டுக்கும் நடுவில் நின்று வாக்காளர்களை ஊசலாடச் செய்திருக்கின்றன கட்சிகள். அந்தக் கட்சி வந்தால் இந்தச் சலுகை கிடைக்கும் எனச் சில சாமானிய வாக்காளர்கள் தளம்பல் அடைகிறார்கள். வேறு சிலரோ "உரிமைகள் அற்ற சலுகைகள் எலும்புத் துண்டுகளே" என்று கூறுகின்றனர்.

"இந்தத் தேர்தலில் யாழ்ப்பாண மக்களின் வாக்குகள் மிக அதிகமாகப் பிரிபடப்போகின்றன. இதில் எந்தக் கட்சியும் அதிக இடங்களைக் கைப்பற்ற முடியாது. எனவே, எந்தக் கட்சியாலும் எதையும் செய்யக்கூடிய வல்லமையை இத்தேர்தல் தரமாட்டாது" என்கிறார் 65 வயதுடைய மூத்த அரச அதிகாரி ஒருவர்.

**பிரியன்**

"ஒவ்வொரு கட்சியும் எங்கள் முகாமுக்கு வந்துபோயிருக்குது. சிலகட்சிகள் எங்கள்விவரங்களைக் கேட்டு எழுதிக்கொண்டு போயிருக்குதுகள். எங்கட பிரச்சினைகளுக்கு எலெக்சனுக்கு முன்னால் யார் தீர்வு தருகிறார்களோ அவர்களுக்குத்தான் எங்கள் வாக்கு. இல்லையெண்டால் ஒருவருக்கும் இல்லை" என்கிறார் சாவகச்சேரியிலிருந்து இடம்பெயர்ந்து, நலன்புரி நிலையம் ஒன்றில் தங்கியுள்ள ஒருவர்.

"நான் எந்தக் கட்சிக்கும் வாக்களிக்கப் போவதில்லை. வேண்டுமானால் வாக்குகளை செல்லுபடியாக்குவேன்" என்கிறார் கடந்த தென்மராட்சி அனர்த்தத்தில் தனது பிள்ளையைப் பறிகொடுத்த ஒருவர்.

"என்ர பிள்ளை வீதியால் செல்லும் போது பிடிக்கப்பட்டு காணாமல் போனான். அந்தநிலை நீடிக்கக் கூடாது. எனவே, எங்கட பிள்ளைகள் நிம்மதியாகத் தெருவில் சென்று வர வழிவகை செய்யக் கூடியவர்களுக்கே எனது வாக்கு" என்றார் காணாமல்போன ஒருவரின் தந்தை.

இப்படியே, ஒவ்வொருவரதும் நிலைப்பாடு ஒவ்வொன்றாக உள்ளது. ஆனால் ஒட்டுமொத்தமாக பார்க்கும்போது தேர்தல் தொடர்பான அக்கறை சாதாரண மக்களிடம் பெரிதாக இல்லை. இதன் பலாபலன் எப்படி அமையப்போகிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ★

# தனி நலன் வேண்டாம்; தமிழின நலன் மேலோங்கட்டும்!

நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற இன்னும் ஒரு வாரம் மட்டுமே இருக்கும் சூழ்நிலையில் இதுவரை இடம்பெற்ற பரப்புரைகளின் அடிப்படையில் யாழ.மாவட்ட தேர்தல் களத்தை ஆராய்வது சகல தரப்பினருக்கும் பொருத்தமானதாகும்.

முன்னர் கல்விமான்கள், அறிவாளிகள்,ஆற்றலுள்ளோர், நேர்மையானவர்கள் பிரதிநிதித்துவம் செய்த பிரதேசம் யாழ்ப்பாணம் தோதல் மாவட்டம் என்பதையும் 1983க்குப் பின்பு இந்நிலை மாறுபட்டிருப்பதையும், நிரூபிக்கப்பட்ட தலைவர்களைத் தெரிவு செய்த மண் இது என்பதையும் முதலில் குறித்துக்கொள்ள வேண்டும்.

தேர்தல் களத்தில் இருபது அணிகள் போட்டியிடுகின்றன. இவற்றில் இரண்டு பாரம்பரிய தமிழ்க் கட்சிகளையும், ஜனநாயகத்திற்குத் திரும்பியதாகக் கூறும் 5 தமிழ்க் குழுக்களையும் தவிர, மிகுதி 13 அணிகளில் பெரும்பாலானவை தெற்கத்திய சிங்கள இனவாதக் கட்சிகளாகும். இப்படியான ஒரு நிலை 1977க்கு முன்பு நினைத்துக் கூட பார்க்கமுடியாத ஒன்றாகும்.

இவ்வளவு சிங்கள இனவாதக் கட்சிகள் இங்குபோட்டியிடும் சூழ்நிலை ஏன் உருவாகியது? இதே போல் வட-கிழக்கு தமிழ்கட்சி ஒன்றாவது தெற்கில் போட்டியிடுவதை நினைத்துப்பார்க்க முடியுமா? சகலரும் சிந்திக்கவேண்டும்.

தமிழ்க்கட்சிகளைப் பொறுத்தவரை அவற்றில் ஒரு பாரம்பரியக் கட்சியும், மூன்று ஜனநாயகத்திற்கு திரும்பிய கட்சிகளும் கடந்த நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்தவை. இப்பொழுது ஒன்றையொன்று குற்றஞ்சாட்டி சேறு பூசிக்கொண்டு நின்றாலும், அரசாங்கத்துடன் ஒத்துழைத்ததில் இவர்களுக்குள் வேற்றுமை இருக்கவில்லை.

1996இல் 600 பேர் காணாமற்போனமை, செம்மணி புதைகுழி, கிருஷாந்தி கொலை, படுகொலைகள்,பாலியல் வல்லுறவுகள், இடப்பெயர்வுகள், அகதி வாழ்க்கை, நிவாரணத்திற்கு கையேந்தல், தொழில் வாய்ப்பு இழப்பு, சொத்துக்கள் இழப்பு ஆகியவை பற்றி எல்லாம் இப்பொழுது இவர்கள் குரல் எழுப்புகின்றனர். இதை இவர்கள் அந்தந்த காலங்களிலேயே செய்திருந்தால் இந்த அனர்த்தங்களையும் அழிவுகளையும் தடுத்திருக்கலாமே!

இத்தனைக்கும் காரணமான அவசரகாலச்சட்ட பிரேரணைகளை மாதாந்தம் இவர்களில் சிலர் கண்மூடிக் கொண்டு ஆதரித்தனர்; சிலர் மதில் மேற் பூனையாக மௌனம் சாதித்தனர்; நடுநிலை என்றனர்; கடைசியில் எதிர்ப்பதாகக் கூறினர்.

யுத்தத்திற்கான பெருவாரியான நிதி ஒதுக்கீடு தொடர்பாகவும், இதே நிலையையே இவர்கள் கையாண்டனர்.

புலிகளுக்கெதிரான போர் என்று கூறப்படும் இந்த யுத்தத்தினால் எண்ணிலடங்கா அப்பாவித் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டிருப்பது இவர்களுக்குத் தெரியாதா? இந்த யுத்தம் சிங்களப் பெரும்பான்மை இனமானது, தாம் அடக்கி ஆளுவதற்கு ஓர் இனம் வேண்டும் அது தமிழினம் தான் என்ற எண்ணத்துக்கும்; தமிழரின் சுய மரியாதையோடு வாழவேண்டும் என்ற விடுதலை உணர்வுக்கும் இடையிலான யுத்தம் என்ற யதார்த்தத்தையும் இனியாவது சகலரும் புரிந்து கொள்ளவேண்டும்.

கொழும்பில் நிரந்தரமாக வசித்தவர்களுக்கு இவை தெரியாதுதான். அதனால்தான் போலும் இங்கு வந்ததும் குய்யோ முறையோ என்று குளறி ஒப்பாரி வைப்பதாக காட்டிக் கொள்கின்றனர்.

### ஒரு வாசகரின் கடிதம்

1981 இல் எட்டுலட்சத்து முப்பத்தோராயிரமாக இருந்த யாழ். தேர்தல் மாவட்ட சனத்தொகை வழமையான வளர்ச்சி விகிதத்தின் அடிப்படையில் 2000 ஆம் ஆண்டில் 14 லட்சத்தை அண்மித்திருக்க வேண்டும். ஆனால் இங்கிருப்பதோ உண்மையில் சுமார் 4லட்சம் பேர் மட்டும். அதிலும் அநேகர் எப்போது வெளியேறுவோம் என்று கப்பல் ரிக்கற்றிற்கு அலைந்து கொண்டிருக்கின்றனர். இந்த நிலை தொடர்ந்தால் 2001இல் யாழ்.மாவட்ட சனத்தொகை இரண்டு லட்சமாகக் குறைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்த நிலை ஏன் என்பதை எல்லோரும் சிந்திக்க வேண்டும். கடந்த ஆறுவருடங்களாக கானல்நீராக காட்டப்பட்ட தீர்வுப்பொதி, தீர்வுப்பொட்டலமாகக் கரைந்துவிட்டது.

"சிறுபான்மைத் தமிழ் இனத்தவரை யுத்தத்தினால் அழித்து விடலாம். ஆனால்...." என்ற கூற்று ஆழ்மனதில் பதிந்திருந்த சிந்தனையின் எதிரொலி என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

இந்த நிலை எழுந்தது தமிழினத்தின் ஒற்றுமையீனத்தினாலும், தனித்தனி தலைமைத்துவ அகங்காரத்தினாலும்தான் என்பதையும் சுட்டிக் காட்ட வேண்டும்.

இந்த நிலையில் இத் தேர்தலில் போட்டியிடும் அணிகள் பின்வரும் விடயங்களில் தமது நிலைப்பாட்டை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

1) இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாத "தீர்வுப்பொதி" பற்றியும், அதன் நிறைவேற்றுகை பற்றியும் இன்னும் நம்பிக்கையுடன் பேசப்போகின்றார்களா?

2) தொடர்ந்தும் தமிழின அழிவுக்கு வழி வகுக்கும் யுத்தத்தை தொடர்வதற்கான அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கப் போகின்றார்களா அல்லது தமிழின ரீதியில் ஒன்றிணைந்து இதை நாடாளுமன்றத்தில் எதிர்க்கப் போகின்றார்களா?

3) யுத்தம் காரணமாக நிகழும் இடப்பெயர்வுகளுக்கு நிவாரண விநியோகம் என்று சலுகை பேசாது இந்த யுத்தத்தையே நிறுத்திப் பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்ய சகலரும் ஒன்றிணைந்து செயற்படப் போகிறார்களா? தமிழினத்துக்கு சலுகையல்ல உரிமைதான் தேவை எனப் பேசப்போகின்றார்களா? அல்லது யுத்தத்தை ஏற்று நிற்கப் போகின்றார்களா?

4) நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பார்க்க கிலோ ஒன்றிற்கு ஏழு ரூபாவிலிருந்து பன்னிரண்டு ரூபாவுக்கு மேலாகவும், எரிபொருள்களுக்கான கொழும்பு விலையிலும் பார்க்க ஐம்பது வீதம் அதிகரித்த விலையிலும் பொருள்களை வாங்கி அதிகரித்த வாழ்க்கைச் செலவை சமாளிக்க முடியாது திண்டாடும் முழு யாழ். மாவட்ட மக்கள் சார்பாக வும் எதிர்ப்புக்குரல் எழுப்பப் போகின்றார்களா? அல்லது இப்படி அநீதியாக நடந்து கொள்ளும் அரசுக்கு துணை போகப் போகிறார்களா?

எவ்வாறாயினும் இந்தத் தேர்தலோ, அதன் மூலம் தெரிவு செய்யப்படும் அரசோ அல்லது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களோ இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பார்கள் என்பது சந்தேகத்திலும் சந்தேகமே.

வாக்களிக்கும் பொது மக்களும் மேற் குறிப்பிட்ட அம்சங்களைக் கருததில் கொண்டு தனி நலன்களிலும் பார்க்க தமிழின நலனே மேலோங்கி நிற்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு தீர்மானம் எடுத்து வாக்களிப்பதே பொருத்தமானது.

யாழ்ப்பாணம். முருகஞானம்.

# யுத்தத்தை வென்றெடுக்கும் சக்தி பிக்குமாரிடமே உண்டு!

## பூமிபுத்ர கட்சித் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.2

தற்போது இடம்பெற்று வரும் யுத்தத்தை வென்றெடுக்கும் சக்தி பௌத்த குருமாரிடம் மட்டுமே உள்ளது. சிங்கள மகாசம்பத பூமிபுத்ரக் கட்சியின் தலைவர் ஹரிச்சந்திர விஜயதுங்க நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

உண்மையான சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ளும் வகையில் தமது கட்சி 1815ஆம் ஆண்டினை நோக்கி உள்ளதாகவும் -

தமது கட்சி கூடுதலான வாக்குகளை பெற்று நாடாளுமன்றம் சென்றால் புதிய அரசமைப்புச் சீர்திருத்தச் சட்ட நகலை தயாரிக்கும் பொறுப்பு பௌத்த குருமாரிடமும் சிங்கள பௌத்தர்களிடமும் ஒப்படைக்கப்படும் எனவும் -

பௌத்த அரசியல் ஆளுமை வழிமுறைகளுக்கு ஏற்ப நாடு நிர்வகிக்கப்படும். தேர்தல் முடிவடைந்ததும் நாடாளுமன்றில் பௌத்த குருமாரும் இடம்பெறுவர் என்றும் -

அவர் கூறினார். (ஐ-8)

### சீரற்ற மின் விநியோகம்

புன்னாலைக்கட்டுவன்.ஒக்.2

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் கடந்த சில நாள்களாக மின் விநியோகம் சீரின்றி இருப்பதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

தொடர்ச்சியாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாக ஏற்படும் மின் கசிவு மற்றும் மின்தடங்கல்களே இதற்குக் காரணமாகும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9-137)

கண்மூடித்தனமாக ஆதரிக்கவும் மாட்டோம்!
கண்மூடித்தனமாக எதிர்க்கவும் மாட்டோம்!
முறையான அரசியல் தீர்வுக்காய் போராடுவோம்!
உருப்படியான தீர்வு முயற்சிகளுக்கு ஒத்துழைப்போம்!

என்றும் உங்கள் சின்னம் நங்கூரம்
ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி
(புளொட் + ஈரோஸ்)

X

(78906)

# வாழ்த்துகிறோம்

06.10.2000 அன்று வெள்ளிவிழா கொண்டாட இருக்கும்

தேவி அச்சகத்தினரை

பொன்விழாவை நோக்கி வீறுநடை போட வாழ்த்துகின்றோம்.

ஸ்ரீ விக்கினேஸ்வரா அச்சகம்
150, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (78971)


# புதிய கடல் அனுமதிப் பத்திரங்கள் குருநகர் மீனவருக்கு வழங்கப்படும்

குருநகரிலுள்ள மீனவர் சங்கங்கள் தமது உறுப்பினர்களுக்கு இவ்வாண்டுக்குரிய புதிய கடல் அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன.

குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம், குருநகர் சிறகுவலை அபிவிருத்திச் சங்கம், குருநகர் சென் ஜேம்ஸ் இழுவைறால் மடிச் சங்கம் ஆகியன தமது உறுப்பனர்களின் புகைப்படங்களைப் பெற்று பதிவு நடவடிக்கைகளை துரித கதியில் மேற்கொண்டு வருகின்றன. (ஐ-51)

## முத்திரைகள் தட்டுப்பாட்டு

குடாநாட்டில் தற்போது தபால் முத்திரைகள், வான் அஞ்சல் உறை தபால் அட்டை என்பனவற்றுக்குத் தட்டுப்பாடு நிலவிவருகின்றது.

குறிப்பாக கிராமப் புறங்களில் உள்ள தபால் நிலையங்களில் இவற்றுக்குப் பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள போதும் தனியார் கடைகளில் கூடுதல் விலையில் இவற்றைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது. (ஐ-133-9)

## தும்புத் தொழிற்சாலை ஆரம்பம்

அரியாலை,ஒக.2

வேலணை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் பனம்,தென்னம் தும்பு பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை அண்மையில் திறந்து வைத்துள்ளது. (ஐ-17)

# ஏழாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 1934 - 09 - 07

விண்ணில் 1993 - 09 - 20

அமரர்

## E.K. ஆறுமுகம்

(முன்னாள் இ.போ.ச.பஸ் நடத்துநர், ஹோமகம, ஹற்றன், பருத்தித்துறை சாலை)

*திதி : 02–10–2000*

அன்பின் இருப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய் குடும்பத்தின் தலைவனாய்
இருந்து எம் உயர்வுக்காய் உழைத்து நல்வாழ்வு
வாழ வழிகாட்டிய எம் அன்புத் தெய்வமே!
நீங்கள் ஓடி மறைந்தீர் ஏழாண்டு
எங்கள் மனதில் வீற்றிருப்பீர் பல்லாண்டு!

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்.

*புதுவீடு,*
*வல்வெட்டி,*
*வல்வெட்டித்துறை.* (78846)


# வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்
வலிப்புநோய், பீனிசம்
தலையிடி, தலை, [illegible]
அவியல், சருமநோய்கள்,
மாதவிடாய்க் குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல், மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
விரியக் குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபலமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்.
வேலணை
வைத்திய கலாநிதி
சி. இராசரத்தினம்
121,2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
*தொலைபேசி எண்: 2459* (78954)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்

## டேவிற் ஆரோக்கியநாதன்

அன்னைமடியில் 06-12-1942 — ஆண்டவன் அரவணைப்பில் 02-09-2000

எம்மோடு வாழ்ந்து பாசத்தோடு பழகிய எம் அன்புக்குரிய டேவிட் ஆரோக்கியநாதனை நாம் இழந்து கலங்கி நின்ற வேளையில் ஆறுதலாக இருந்து, உதவிகள் பல புரிந்த அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயத்திலிருந்து நன்றி நவில்கின்றோம்.

அத்துடன் இவரின் ஆன்ம சாந்திக்காக நவாலி சென்.பீற்றேர்ஸ் தேவாலயத்தில் ***இன்று (02.10.2000) திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு (புதிய நேரம்)*** ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியில் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.
அருட்செல்வி மே.தேவநேசம்.

*நவாலி தெற்கு,*
*மானிப்பாய்.* (78794)

# அழைப்புக் கட்டளை

## இல.16 பிரிவு 55 (1)

ஊர்காவற்றுறை என்னுமிடத்திலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில்

தேவசகாயம் ஜீவராசா
6 ஆம் வட்டாரம்,
வேலணை மேற்கு,
வேலணை.

வழக்கு இல. ம.நீ./ 01. எதிர் வழக்காளி/கள்

தே.ஜீவராசா பெண் திரேசா
முன்னர் அபிறான் மகள் திரேசா
அரசடிவிநாயகர் வீதி,
கட்டுடை, மானிப்பாய்.

எதிராளி/கள்

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளி/களுக்கு
மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி

மணநீக்கம் கோரி

இந் நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாதலினால் இதனோடிணைக்கப்பட்டுள்ள பிராதுக்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின், 2000ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 27ஆம் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்தில் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும்படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
V. நடராசர்
பதிவாளர்

குறிப்பு:- விளக்கத்தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80-ம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

கையொப்பம், பதிவாளர்.

2000ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 25ஆம் நாளாகிய இன்று வரைவு:

க. இளங்கோவன்
வழக்காளி சட்டத்தரணி

பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்
ஊர்காவற்றுறை. (78867)

# கேள்வி அறிவித்தல்

## நல்லூர் பிரதேச சபை - நவீன சந்தை திருத்தம் திருநெல்வேலி

01. கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபைத் தலைவரால் நியமிக்கப்பட்ட கேள்விச் சபையினரால் 2000ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 16ஆந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிவரை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கிடைக்கப்பட்ட கேள்விகள் அதே அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி பிரசன்னமாயிருத்தல் வேண்டும்.

02. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தின் 'இக்ராட்' (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு தரம் எம்-6ம் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் மட்டும் தகுதியுடையவர் ஆவர். அவர்களின் பதிவுப்புத்தகமும் நிதி நிலைமைகளும் நல்லூர் பிரதேச சபை செயலாளரினால் பரிசீலிக்கப்பட்ட பின்பு தகுதி உடையவர்களுக்கே கேள்விப்பத்திரம் வழங்கப்படும்.

03. தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் செலுத்தி கேள்விப் பத்திரத்தினை 2000ஆந் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 02ஆந் திகதி முதல் 2000ஆம ஆண்டு ஒக்ரோபர் மாதம் 13ஆந் திகதி பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

04.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|
| திருநெல்வேலி நவீனசந்தை திருத்தம் | 75,000/- | 2000/- |

05. கேள்விப்பத்திரங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு மூலப்பிரதியையும் இணைப்பிரதியையும் தனித்தனி இரு கடித உறைகளில் இடப்பட்டு சீல் வைக்கப்பட்டு கடித உறைகளின் இடது புற மேல் பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். ஒரு பிரதியை தலைவர், நல்லூர் பிரதேச சபை என விலாசமிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்ப வேண்டும் அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியில் போட வேண்டும். மறு பிரதியை பி/உ.உ.ஆணையாளர், பி/உ.உ.ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்ப வேண்டும்.

06. கேள்விப் பத்திரங்களில் பொருள்கள் சேவைகள் வரி (ஜி.எஸ்.ரி) சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை, பொருள்கள் சேவைகள் வரி (ஜி.எஸ்.ரி) சேர்க்கப்படாத கேள்வித் தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். சரியாக நிரப்பப்படாத, பிழைகள் கூடிய, தெளிவற்ற கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கேள்விச்சபையின் முடிவே இறுதியானது ஆகும்.

07. தெரிவு செய்யப்படும் ஒப்பந்தகாரர் 2000ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆந் திகதிக்கு முன் அனைத்து வேலைகளையும் பூர்த்தி செய்து கையளித்தல் வேண்டும். எவ்வித காலதாமதங்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

08. கேள்வி ஆவணங்கள் இலவசமாக பார்வையிடுவதுடன் மேலதிக விபரங்களையும் நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

*தலைமைச் செயலகம்,*
*நல்லூர் பிரதேச சபை,*
*திருநெல்வேலி.*

(ப/13149)

க. மணிபல்லவராஜன் (ஜே.பி.யுஎம்)
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.

# இனப்பிரச்சினை ஒன்று இருப்பதை 2 பிரதான கட்சிகளும் மறந்துள்ளன

## தேர்தல் பிரசாரங்கள் குறித்து தெற்குப் புத்திஜீவிகள் கருத்து

கொழும்பு, ஒக். 2

இரு பிரதான கட்சிகள் உட்படச் சகல சிங்களக் கட்சிகளும் இதுநாள் வரை மேற்கொண்டுவரும் தேர்தல் பிரசாரங்களை நோக்கும் போது, இலங்கையில் இனப்பிரச்சினை என்று ஒன்று இருப்பதை மறந்த நிலையிலேயே அவை செயற்பட்டு வருகின்றன. அதே சமயம் இக்கட்சிகள் யாவும் பௌத்த மகாசங்கத்தினரையும் சிங்கள மக்களையும் இனவாத நோக்கில் திருப்திப் படுத்துவதிலேயே நாட்டம் கொண்டுள்ளன.

மேற்கண்டவாறு தெற்கில் உள்ள புத்திஜீவிகளும், அரசியல் அவதானிகளும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

கொழும்பில் இனத்துவ ஆய்வுகளுக்கான சர்வதேச நிலையத்தில் '2000 பொதுத் தேர்தல், அறிவுசார் நோக்கு' என்ற தலைப்பில் இடம்பெற்ற கருத்தரங்கில் உரையாற்றியவர்களே இந்தக் கருத்துக்களை வெளியிட்டனர்.

தேசிய சமாதானப் பேரவையின் இயக்குநர் கலாநிதி ஜெகான் பெரேரா பேசுகையில் கூறியதாவது:-

கடந்த 3 வாரகாலப் பிரசாரங்கள், சிங்களக் கட்சிகள் அனைத்தும் இந்த நாட்டில் இனப்பிரச்சினை என்று ஒன்று இருப்பதை மறந்துள்ளதையே புலப்படுத்துகின்றன. பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பிரசாரங்களில் யுத்தத்தை முதன்மைப்படுத்தும் போக்கே அதிகரித்து வருகின்றது.

1994 இல் சமாதானம், ஜனநாயகம் என்ற கோஷங்களை முன்வைத்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணி இந்தத் தடவை தனது சமாதானத்துக்கான யுத்தத்தை நியாயப்படுத்த முனைந்துள்ளமை கவலை தருவதாக உள்ளது. பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் எதிர் மறையான போக்காகவே இது அமைகின்றது.

எந்தக் கட்சிக்குமே நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத நிலையை நோக்கி நாடு சென்று கொண்டிருப்பதாகப் பரவலாகக் கருதப்படுகின்றது. தேசிய அரசாங்கம் ஒன்று எதிர்காலத்தில் உருவாகப் போகின்றது என்று திடமாக நம்புகின்றோம்.

இதன் மூலம் சில நன்மைகள் உண்டாகக்கூடும். குறிப்பாகப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும், ஐ. தே. கட்சியும் இனப்பிரச்சினை தொடர்பாகச் சில உடன்பாட்டுக்கு வரவேண்டி நேரிடலாம் — என்றார்.

மாற்றுக் கொள்கைகள் நிலையத்தைச் சேர்ந்த ரொகான் எதிரிசிங்க பேசுகையில் கூறியதாவது:-

இனப்பிரச்சினை குறித்து முக்கிய கட்சிகள் கவனம் செலுத்தாத அதேவேளை, ஒருவர் மீது மற்றவர் சேறுபூச முயற்சிக்கின்றன. குறுகிய அரசியல் இலாபங்களுக்காக வடக்கு — கிழக்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போரையும் விடுதலைப் புலிகளையும் பயன்படுத்தவும் முனைந்துள்ளன,

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியிடமே இந்த முனைப்பு அதிகமாகக் காணப்படுகின்றது. ஐ. தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைப் புலிகளுடன் தொடர்புபடுத்தும் பிரசாரங்களில் அது தீவிரமாக ஈடுபட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தலின் போதும் இதேமுயற்சியில் அது ஈடுபட்டது.

1994 இல் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க போன்றவர்களால் தயாரிக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனம். இம்முறை பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவினால் தயாரிக்கப்பட்டுள்ளது போன்றே தோன்றுகின்றது.

தேசிய அரசாங்கம் ஒன்று அமைவது வரவேற்கப்பட வேண்டியதாகும். இரு தேசியக் கட்சிகளும் இணைந்து பணியாற்ற வேண்டி நிர்ப்பந்திக்கப்படுவதால் இனப் பிரச்சினைக்கான தீர்வு ஒன்றுக்கு அவை முன்வரவேண்டியிருக்கும். நோர்வே சமாதானத் தீர்வுக்காக இட்டுள்ள அடித்தளத்தை அந்தவேளை பயன்படுத்தலாம்.

வடபகுதியில் இடம்பெறும் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் போன்ற பாரம்பரிய தமிழ்க் கட்சிகள் வெற்றிபெறும் சந்தர்ப்பத்தில் இதற்கான அழுத்தம் இன்னமும் அதிகமாகலாம்— என்றார்.

மனித உரிமைகள் பணிப்பாளர் சுனிலா அபயசேகரா பேசுகையில் கூறியதாவது:-

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பௌத்த மதத்துக்கு அளவுக்கதிகமான முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் அனைத்துப் பிரதான கட்சிகளும் ஒன்றையொன்று தாக்குவதிலேயே அதிக நேரத்தைச் செலவிடுகின்றன. அவற்றின் நோக்கம் என்னவென்று புரியவில்லை. இலங்கை ஒரு பல்லின சமூகத் தன்மை கொண்ட நாடென்பது குறித்தோ அதனை எவ்வாறு நிர்வகிக்கவேண்டும் என்பது குறித்தோ பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உட்பட எந்தக் கட்சியும் தேர்தல் விஞ்ஞாபனத்திலோ அல்லது தேர்தல் பிரசாரங்களிலோ தெரிவிக்கவில்லை. மனித உரிமைகளுக்கான முக்கியத்துவம் எந்தக் கட்சியாலும் வழங்கப்படவில்லை — என்றார் — (இ-3)

## மலசல கூடங்கள் அமைக்கப்படும்

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தால் தம்பாட்டி, மெலிஞ்சிமுனை, காரைநகர் தென்மேற்கு, கரம்பன் கிழக்கு ஆகிய பகுதிகளில் நிறுவப்பட்ட வீடமைப்புத் திட்டங்களில் புதிய மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனமும் ஐக்கிய நாடுகளுக்கான சிறுவர் பாதுகாப்பு நிதியமும் இணைந்து மலசல கூடங்களை அமைப்பதற்கான நிதியினை வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-ரி)

## மீண்டும் சேவையில்

சாவகச்சேரி, ஒக். 2

படையினரின் பாவனையில் இருந்த சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் லொறி மீண்டும் சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டிருந்தது. அந்தலொறி சேதமடைந்திருந்ததைத் தொடர்ந்து திருத்தம் செய்யப்பட்டு மீண்டும் சங்கத்தின் தேவைக்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-31)

## யாழ். தேர்தல் அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஒக். 2

எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் உள்ள வாக்களிப்பு நிலையங்களில் கடமையாற்றவுள்ள தேர்தல் அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் சம்பந்தமான பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

சிரேஷ்ட தலைமை அலுவலர்கள், கனிஷ்ட தலைமை அலுவலர்கள், வாக்கெடுப்பு எழுதுவினைஞர்கள் எனப் பணியாற்றவிருக்கும் சுமார் 4 ஆயிரம் பேருக்கு இந்தப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

சிரேஷ்ட தலைமை அதிகாரிகளுக்கு இன்று திங்கட்கிழமை காலை 10மணிக்குச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இரு அமர்வுகளாகப் பயிற்சி வழங்கப்படும்.

கனிஷ்ட தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்கெடுப்பு எழுதுநர்களுக்கு நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், வேலணை சரஸ்வதி வித்தியாலயம் ஆகியவற்றில் பயிற்சி வழங்கப்படும்.

சிரேஷ்ட தலைமை அலுவலர்களுக்கு யாழ். மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் எஸ். நடராசா பயிற்சிகளை வழங்குவார். ஏனையவர்களுக்கான பயிற்சிகள் உதவித் தேர்தல் ஆணையாளரினால் பயிற்றுவிக்கப்பட்ட அதிகாரிகளினால் வழங்கப்படும்.

இதேவேளை—

தேர்தல் கடமையில் ஈடுபட உள்ள சகலதர அலுவலர்களுக்குமான கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும்—

பயிற்சி வகுப்புக்கு சமுகமளிப்போர் தமது வசிப்பிடங்களுக்கு அருகில் உள்ள பயிற்சி நிலையங்களுக்குச் செல்ல முடியும் என்றும் — யாழ். மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (இ-9)

## யூனியன் கல்லூரி அபிவிருத்திக்கு நிதி உதவி கோருவதென முடிவு

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் அபிவிருத்திக்காக தொண்டர் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களின் உதவிகளைக் கோருவதென மேற்படி வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சபை தீர்மானித்துள்ளது.

கடந்த வாரம் பாடசாலை அதிபர் எஸ். புண்ணியசிலன் தலைமையில் பாடசாலை அபிவிருத்திச் சபையின் கூட்டம் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தில் தற்சமயம் குடிதண்ணீர் வசதிகள், மலசலகூட வசதிகள் போதியளவு இன்றி இருப்பதால் ஆசிரியர்களும் மாணவர்களும் பெரிதும் கஷ்டப்படுகின்றனர் என்றும் —

முதலில் அதனைச் சீர்செய்ய வேண்டியிருப்பதாகவும் அதிபர் தெரிவித்ததையடுத்து இதற்கான உதவிகளை தொண்டர் நிறுவனங்கள், பொதுமக்கள் ஆகியோரிடமும் கோருவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

நாட்டின் நிலைமை காரணமாக கடந்த 10 வருடங்களாக மருதனார் மடத்தில் இயங்கிவரும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆசியாவில் அமெரிக்கன் மிஷனரியினரால் 1816 இல் முதன்முதல் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-111)

## வல்லைப் பாலத்தை திருத்துமாறு நகரசபைத் தலைவர் கோரிக்கை

நெல்லியடி, ஒக். 2

''உடைந்து விழும் அபாய நிலையில் சிவப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருக்கும் வல்லைப் பாலத்தின் அவசர திருத்த வேலைக்கு உடனடியாக 10 லட்சம் ரூபாவை ஒதுக்கி வேலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவும்''

இவ்வாறு வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் எம். கே. சிவாஜிலிங்கம், யாழ். அரசாங்க அதிபர் கே. சண்முகநாதனுக்கு அனுப்பி வைத்த அவசரகோரிக்கையில் தெரிவித்துள்ளார்.

வடமராட்சியையும்— யாழ்ப்பாணத்தையும் இணைக்கும் பிரதான பாலமாக விளங்கும் வல்லைப் பாலம் தற்பொழுது உடைந்து விழும் அபாய நிலையில் உள்ளது.

இதனால் இந்தப்பகுதியால் செல்லும் வாகனங்கள் எந்த நேரமும் கடலுக்குள் விழும் அபாய நிலை உருவாகியுள்ளது. கடந்த வாரமும் இப்பாலத்தின் ஊடாக பயணம் செய்த இராணுவ வாகனம் ஒன்றும் குடைசாய்ந்து மீட்கப்படாத நிலையில் இன்னும் வல்லைக் கடலில் கவிழ்ந்து கிடக்கின்றது.

எனவே பயணிகளின் உயிர் ஆபத்தைத் தவிர்க்கும் வகையில் அவசர திருத்த வேலைக்காக 10 லட்சம் ரூபாவை ஒதுக்கி பாலத்தைத் திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-109)

### அமைச்சுக்குச் சொந்தமான வாகனங்களில்

## ஆயுதங்களுடன் முகமூடி அணிந்து வந்தோர் மக்கள் மீது தாக்குதல்

அம்பாறை, ஒக். 2

அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்றில் துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுக்குச் சொந்தமான வாகனங்களில் ஆயுதங்களுடன் முகமூடி அணிந்து வந்த குழு ஒன்று, அந்தப் பகுதியில் சுவரொட்டிகளை ஒட்டியதுடன் வீதியில் நின்ற பொதுமக்களையும் தாக்கியுள்ளது.

கடந்த வெள்ளி இரவுஇடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக அம்பாறை மாவட்டப் பிரதிப் பொலீஸ் மா அதிபரிடம் ஐ. தே. கட்சியினர் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தின் எதிரொலியாக அக்கரைப்பற்று பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி முகைதீன் வேறு இடத்துக்கு இடமாற்றம்செய்யப்பட்டுப் புதிய பொறுப்பதிகாரியாக கமகேன் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

அந்தப் பகுதியில் அசம்பாவிதங்கள் இடம்பெறாமல் தடுக்கும் முன் முயற்சியாக புதிய பொறுப்பதிகாரி 25பேர் கொண்ட விசேட பொலீஸ் குழு ஒன்றை அமைத்துள்ளார்.

இந்தக் குழு மேற்கொண்ட விசாரணையின் பேரில் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடியவர்கள் எனஇனங்கண்டு இருவரைப் பொலீஸார் கைது செய்துள்ளனர். (இ-3-20)

## வீடமைப்புத் திட்டம்

ஊர்காவற்றுறை ஒக் 2

ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு வடக்கு — கிழக்கு மீள்குடியமர்வு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட 30 லட்சம் ரூபா நிதியில் 13 லட்சம் ரூபா சேரிஒழிப்புத் திட்டத்துக்கு பயன்படுத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய முதல் கட்டமாக மிகவும் வறிய நிலையில் காணப்படும் குடும்பங்களுக்கு கரைச்சிப்பகுதி யில் 8 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாக பிரதேசசபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க)

## ஹாட்லியின் கண்ணீர் அஞ்சலி

முன்னாள் அதிபர்

### அமரர் க. நடராசா

இருபத்திரண்டாண்டுகள் ஹாட்லியின் அதிபராகவும் ஆசிரியராகவும் இருந்து சமீபத்தில் ஓய்வுபெற்ற திரு. க. நடராசா அவர்கள் 30 - 9 - 2000 கொழும்பில் காலமான செய்தி கேட்டு நாமெல்லாம் ஆறாத் துயரடைந்தோம். மீளாக்கவலையில் ஆழ்ந்துள்ள அன்னாரது குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஹாட்லிச் சமூகம்.

(சி/13160)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இலக்கியக் கட்டுரைகள்

'வீடற்றவன்' நாவல் விளக்கத்துடன் க.பொ.த. சாதாரணதர - உயர்தர மாணவர்கள் தமிழ்மொழியும் இலக்கியமும் கற்க உதவக்கூடிய 38 கட்டுரைகள். அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது. 150 பக்கங்கள் ரூபா 125.00. (78719)

## DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக்கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா 350/-). தொடர்பு: பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 3081. (C/13122)

## மணமகன் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச உத்தியோகம் பார்க்கும் பெற்றோர், 28 வயது நிரம்பிய 5'3" உயரமான, பொது நிறமுள்ள, தமிழ், ஆங்கிலம் உயர்கல்விகற்ற, நற்குணமுள்ள மணமகளுக்கு உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ தொழில் புரியும் நற்பண்புள்ள மணமகனை கௌரவ குடும்பத்திலிருந்து எதிர்பார்க்கின்றனர். கத்தோலிக்கம்/கிறிஸ்தவம் விரும்பத்தக்கது. எதிர்பார்க்கும் சீதனம் உள்ளடங்க சகல விபரங்களுடன் தொடர்புகளுக்கு: விள.இல. 1086, மே/பா உதயன். (77720)

## விற்பனைக்கு

குறுகிய காலப் பாவனையில் உள்ள புதிய 8 H.P CHINA டீசல் எஞ்சின் விற்பனைக்கு உண்டு. லான்ட்மாஸ்டருக்கும் பாவிக்கக் கூடியது. தொடர்பு: இ.நாகேஸ்வர சர்மா, முத்துத்தம்பி லேன், கதுமலை தெற்கு, மானிப்பாய். (78974)

மின்ஸ்திரிகை SANYO, மேசை விசிறி (OSCILLATORY, TRI-SPEED), SANYO றைஸ்குக்கர், CARROM - BOARD, புதிய நிலையிலுள்ள சாப்பாட்டு மேசை (FORMICATOP) நான்கு குசன் இருப்பு கதிரைகளுடன் DRESSING TABLE (பெல்ஜியம் கண்ணாடிகளுடன்), பிரம்பு பின்னல் செற்றி வேறும் சில. தொடர்பு: 112, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (78973)

நல்ல நிலையிலுள்ள SP-10 டெக், ஆய்வா வானொலிப்பெட்டி (700w ஜப்பான்) மற்றும் (650v) YAMAHA எஞ்சின் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: கு.சதானந்தன், 5/1 புகையிரத வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (78972)

## தேவை

யாழ்நகரிலுள்ள பல்பொருள் விற்பனை நிலையமொன்றிற்கு தகுதி வாய்ந்த ஆண் விற்பனையாளர்கள் விண்ணப்பிக்கவும். தொடர்பு: இல. 1110, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (78964)

## தரம் 10 புதிய பாடத்திட்டம்

கணிதம் பகுதி II, தமிழ் இலக்கியம் (விருப்பத்துக்குரியது), ஆங்கிலம் அலகு 1, 2, 3, 4, மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: கணேசன், கே.கே.எஸ். வீதி, கொக்குவில். (78893)

## பிரத்தியேக வகுப்புகள்

எமது "நியூ வீணா கானம்" இசை மன்றத்தில் சகல இசை வகுப்புகளுடன் ஆண்டு 6-11 வரையான மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம், சமயம், சமூகக் கல்வி, சங்கீதம் ஆகிய பாடங்கள் விஜயதசமி அன்று ஆரம்பமாகின்றன. நேரம் 3.00p.m - 7.00p.m வரை. தொடர்பு: செல்வி. வாசுகி ரங்கன், 60, வைமன்வீதி, நல்லூர். (78979)

## சனி வக்கிர பலாபலன்கள்

சனீஸ்வர வக்கிரகத்தினால் உங்களுக்கு ஏற்படப்போகும் நன்மை தீமைப் பலாபலன்களை அறிய எங்கும் விற்பனையாகிக் கொண்டிருக்கும் முப்பது ஆண்டுகள் சோதிட உலகில் பிரகாசித்துக்கொண்டிருக்கும் வேலணை சோதிடர் திரு. V.A.சிவராசா வெளியிட்டதென்று கேட்டு வாங்குங்கள். (78970)

---

அரியாலை, கொழும்புத்துறைப் பகுதிகளில்

# வீடுகளைப் பார்க்கச்சென்றோர் அதிர்ச்சி! கூரை இன்றிக் கட்டடங்கள்; மரங்களும் அழிவு!

அரியாலை,ஒக்.2

அரியாலை, கொழும்புத்துறைப் பகுதிகளில் வீடுகள் பெரிதும் அழிவுண்டு காணப்படுகின்றன. வீட்டு உடைமைகள் அழிந்தும் காணாமற் போயும் உள்ளன. சில இடங்களில் பச்சை மரங்களைக்கூட காணமுடியவில்லை. மரங்கள், செடிகள் எரிந்து கருகிக் காணப்படுகின்றன.

அண்மைக்காலத்தில் கடும்சண்டை நடைபெற்ற அரியாலை, கொழும்புத்துறைப் பகுதிகளில் தங்கள் வீடுகளைப்பார்க்க அனுமதிக்கப்பட்ட மக்கள் அங்குசென்று திரும்பியபின் தாம் கண்ட காட்சிகளை மேற்கண்டவாறு விவரித்தனர்.

அரியாலையிலும், கொழும்புத்துறைப் பகுதியிலும் குறிப்பிட்ட சில பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தங்கள் வீடுகளைச் சென்று பார்த்துவர கடந்த வாரம் அனுமதிக்கப்பட்டனர்.

அங்கு சென்று திரும்பியோர் எமது செய்தியாளரிடம்தெரிவித்த தகவல்கள் வருமாறு:-

பல இடங்களில் வீடுகள், கட்டடங்கள் இடிந்து கற்குவியல்களாகக் காணப்படுகின்றன.

பெரும்பாலான வீடுகளின் கூரைகள் இல்லை. கூரைச்சீற்றுக்கள் கழற்றப்பட்டு வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மழைநீர் வீடுகளுக்குள் தேங்கியுள்ளது. வீட்டு உடைமைகள் காணாமல் போயுள்ளன. சில வீடுகளில் உடைமைகள் எரிந்து கருகிய நிலையில் காணப்படுகின்றன.

வீடுகளின் சூழலில் நின்ற பயன்தரு மரங்கள் அழிந்து கருகிக் கிடக்கின்றன. தென்னை மரங்களுக்கும் பெரும்சேதம் ஏற்பட்டிருக்கிறது.

குண்டுகள் வீழ்ந்து வெடித்த குழிகளும் அவற்றின் சிதறல்களும் பரவலாகக் காணப்படுகின்றன.

கொழும்புத்துறை இறங்குதுறை பகுதியும் குண்டு வீச்சினால் பலத்த சேதமடைந்துள்ளது - இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர். (ஐ-15-17)

---

## மின்கம்பம் முறிந்தது

கொக்குவில்,ஒக்.2

ஈவினைப் பகுதியில் அண்மையில் புதிதாக நடப்பட்ட மின்கம்பங்களில் ஒன்று முறிந்து வீதிக்குக் குறுக்காக வீழ்ந்தது.

அப்பகுதியிலே முறிந்த மின்கம்பம் எதிரேயுள்ள வேலியினால் தாங்கப்பட்டு தரைக்கு அண்மையாக சாய்ந்துள்ளது. இதன் விளைவாக அவ்வூர்வாசிகள் மின்கம்பத்தின் கீழே குனிந்துசெல்ல வேண்டியுள்ளது.

---


வெளியாகி வருகின்ற புலமைப்பரிசில் - 2000 முடிவுகளில் எமது மாணவர்கள் பலர் முன்னணிப் புள்ளிகள் பெற்று நிற்பது கண்டு மகிழ்கின்றோம்! வாழ்த்துகின்றோம்!

வழமை போல் ஒவ்வொரு ஞாயிறும் (2001) பயிற்சிப் பரீட்சை நடைபெறும்.

BOND யாழ்நகர்.


## முதியோர் தின விழா

வலிகாமம் வடக்கு,ஒக்.2

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகத்தினால் இன்று திங்கட்கிழமை முதியோர் தினம் கொண்டாடப்படவுள்ளது.

வலி.வடக்குப் பிரதேச ... ளர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கிராம அலுவலர் பிரிவு ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட முதியோர்கள் கௌரவிக்கப்படுவர். அத்துடன் கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் நடைபெறவுள்ளது. (ஐ-86)

---


# COMPUTER

இன்றைய கணனி உலகில் கணனி இயந்திரம் ஒன்று வாங்கி விட்டீர்களா?

பலதரப்பட்ட மொடல்கள் இன்னும் சில தினங்களில் உங்கள் கைகளில்!!!

COMPUTER ACCESSORIES
COMPUTER INK CARTRIDGES
COMPUTER FLOPPY DISKETS
COMPUTER COMPACT DISKETS - SOFT WARE GAMES & PLAIN
PHOTOSTAT TONER POWDER

இன்னும் பல.

மேலும் பல விவரங்களுக்கு....

லிங்கன் ஸ்ரோர்ஸ்

168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C/13159)


---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்
(மாவட்ட முகாமையாளர், இலங்கைவங்கி)

பதவி உயர்வுகள் பல பெற்று
பார் முழுவதும் புகழ் பரப்பி
பல்லாண்டு காலம் வாழ்க ~ என
பசுபதீஸ்வரரை வேண்டுகின்றோம்.

திரு.சு.புவனேஸ்வரன் குடும்பம்
மாவுசந்தி.

(C/13158)

---

# 45ஆம் நாள் நினைவலைகள்

திருநெல்வேலி விவசாய சம்மேளனத்தின் நிர்வாகக் குழுவின் செயலாளர்

திரு.கா.சி.நடராஜா அவர்களின் துணைவியார்

திருமதி லீலா நடராஜா

அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கமநல கேந்திர நிலையம்,
நல்லூர்.
விவசாய சம்மேளனம்,
திருநெல்வேலி.

(78986)

---

யா/வல்வை சிவகுருவின் பெருமைக்குரிய மைந்தர்கள் வரிசையில்......

# செல்வன் புஸ்பராசா சிவரூபன்



5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் அதிகூடிய 182 புள்ளியைப் பெற்று முதன்மை இடத்தைப் பெற்றுள்ளமையினை பாராட்டி வாழ்த்துகின்றனர்.

யா/வல்வை சிவகுரு வித்தியாலய,
பாடசாலைச் சமூகம்.

(C/13157)

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பொன்னுத்துரை - சரசபூபதி
(வீமன்காமம் - தெல்லிப்பழை)

திருமதி பொன்னுத்துரை சரசபூபதி அவர்கள் 30-09-2000 சனிக்கிழமை அன்று கொழும்பில் காலமானார். இவர் காலஞ்சென்ற T.K. பொன்னுத்துரையின் (வன திணைக்கள அதிகாரி) அன்பு மனைவியும், முத்தையா - நாகம்மாவின் சிரேஷ்ட மகளும், S.A.பொன்னுத்துரை (குரியதேவன்), குருதேவன் (சீமெந்து கூட்டுத்தாபனம், கே.கே.எஸ்.), காலஞ்சென்றவரான வாமதேவன், பஞ்சதேவன், இந்திராணி (கனடா), இந்திரதேவன் (லங்கா சீமெந்து நிறுவனம்), ஜெயராணி(கொழும்பு), உதயராணி(கனடா), மகாதேவன்(அரி. ஜேர்மனி), யோகராணி(சுவீடன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சற்குணசுந்தரி, சரோஜினிதேவி, விமலாதேவி, ஜெயவீரசிங்கம், ஜெயமாலினி, சிவகுமார், காலஞ்சென்ற யோகநாதன், சந்திராதேவி, சச்சிதானந்தம் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற சுந்தரலிங்கம், சாவித்திரிதேவி, காலஞ்சென்ற பரமேஸ்வரி, காலஞ்சென்ற மகாலிங்கம் (அப்பச்சி), மகேஸ்வரி, கமலாதேவி, அமிர்தலிங்கம், ருக்குமணிதேவி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று (01-10-2000) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
குருதேவன் குடும்பம்
வீமன்காமம்,
தெல்லிப்பழை.

*நாவலர் றோட்,*
*249, யாழ்ப்பாணம்.*

*கொழும்பு தொலைபேசி,*
*இல.01-585557.*

(78976)

## சுந்தரம் யோகானந்தா
(ஆசிரியர் யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி தெற்கை வதிவிடமாகவும் கொண்ட சுந்தரம் யோகானந்தா அவர்கள் நேற்று (01-10-2000) ஞாயிற்றுக்கிழமை காலமானார். இவர் உமாதேவியின் (ஆசிரியை, யா/நீர்வேலி சி.சி.த.க.) கணவரும், சதீஸ்வரன் (யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி), கீர்த்திபன்(யா/மத்திய கல்லூரி), கௌசிகன் (யா/நீர்வேலி சி.சி.த.க) ஆகியோரின் தந்தையும், திரு.திருமதி சுந்தரம் அவர்களின் மகனும், இந்திரராஜா (கனடா), சரோஜினிதேவி, நகுலாதேவி, இரவீந்திரா, செல்வகுமார், சுந்தராதேவி, அப்பன், சுகுமார், சுபத்திரா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02-10-2000) திங்கட்கிழமை பகல் 12.00 மணிக்கு நீர்வேலியில் நடைபெறும்.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி,பிள்ளைகள்.

*நீர்வேலி தெற்கு.*

(78984)

# முதியவர்களைப் பெறுமதி மிக்க தேசிய சொத்தாகக் கொள்வோம்

சர்வதேச முதியோர் வாரம் நேற்று முதலாம் திகதி ஆரம்பமாகி உள்ளது. அதனை ஒட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

ஒக்ரோபர் முதலாம் திகதி தொடக்கம் 7 ஆம் திகதி வரையான நாள்களை சர்வதேச சமூகம் முதியோர் தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. எமது நாட்டிலும் பிரதேச செயலக பிரிவு ரீதியாக இத் தினத்தை அனுஷ்டிப்பதற்கு சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

## முதியோரிடமிருந்து அனுபவப் பாடங்கள்

முதியவர்கள் என்ற பதத்தை உச்சரிக்கின்றபோது 60 வயதைத் தாண்டிய ஒருவரையே அது சுட்டிக் காட்டுகின்றது. இன்று எம் மத்தியில் இளைய சமூகத்தை விட முதியவர்கள் எண்ணிக்கையே கூடுதலாகக் காணப்படுகின்றது. முதியவர்கள் முதுமைக் கோலத்துடன் அவதரித்தவர்கள் அல்லர். அன்று எம் மண்ணிலே இளையோராக வலம் வந்து பல அனுபவப் பாடங்களையும், பல திறமைகளையும் தம் மகத்தே பொதிந்தவர்களே இன்று முதியோராக சமூகத்திலே வாழ்ந்து வருகின்றார்கள்.

இன்றைய இளைய சமூகம் முதியவர்களிடமிருந்து பல அனுபவப் பாடங்களைக் கற்றுணர வேண்டியுள்ளது. இவற்றை உதறித் தள்ளிவிட்டு 'காவோலை விழக் குருத்தோலை சிரிக்குமாம்' என்ற பழமொழியை தாரகை மந்திரமாக எண்ணிக் கொண்டு முதியோரைப் பார்த்து எள்ளிநகையாடுவதையே தங்கள் குறிக்கோளாகக் கொண்டுள்ளன.

அன்புகாட்டவேண்டியமுதியோரைத் துன்புறுத்தியும், மதிக்கப்பட வேண்டிய முதியோரை மிதித்தும், இரக்கம் காட்டப்பட வேண்டிய முதியோரை தூஷித்தும், உதவ வேண்டிய முதியோரை உதைப்பதுடன் நில்லாது முதியோர் சமூகத்தை ஒரு புறம்பான ஜீவ இராசியாக எண்ணி எமது இளைய சமூகம் செயற்பட்டு வருகின்றது.

தாங்களும் காலச் சக்கர சுழற்சியினால் பிற்காலத்தில் முதியோராக வேண்டி வரவுள்ளோம் என்பதை இன்றைய இளைய சமூகம் உணர வேண்டும். ஆகவே இந்த முதியோர் தினத்தில் முதியவர்களைக் கௌரவப்படுத்துவதை விடுத்து இளைய சமூக மட்டத்தினருக்கு முதியோரைப்பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்துவதே முக்கிய நோக்கமாகக்கொள்ளல் வேண்டும்.

முதியவர்களை இந்த நாட்டின் தேசியச் சொத்தாகக் கருத வேண்டுமே தவிர பரதேசிக் கூட்டமாகக் கருதலாகாது. இவர்களிடத்தில் திறமைகள் பொதிந்து கிடந்தும் அவற்றை அவர்களால் முன்னுக்குக் கொண்டுவராமைக்கு மூலக காரணம் வறுமை மட்டுமல்லாமல் சரியான அரவணைப்பின்மையுமே. அவர்களால் தங்கள் அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியவில்லை என்றே கூறவேண்டும். இந்த நிலையில் எமது இளைய சமூகத்தின் பார்வை முதியோர் பக்கம் திரும்ப வேண்டும். அவர்களுக்கு கைகொடுத்து உதவும் நிலைக்கு வர வேண்டும். இதன் மூலம் முதியவர்களின் ஆற்றல், அனுபவங்களைப் பெற்று பல திட்டங்களை உருவாக்கலாம். இதற்குரிய வழிமுறைகளை சமூகத் தொண்டு அமைப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

**அருள்நேசன்**
**குருநகர்**

## துன்ப சூழலில் முதியோர்கள்

முதியவர்களில் பலர் தங்கள் அந்திய காலங்களில் சொல்லொணாத துன்ப சூழலில் வாழ்ந்து வருகின்றார்கள். இதற்கு சமூக மட்ட, குடும்ப மட்டத்தின் புறக்கணிப்பே காரணம் என்றால் மிகையாகாது. அரவணைத்து ஆறுதல் கூற உறவுகளற்ற நிலையில் முதியோர் விடுதிகளில் தஞ்சம் புகுகின்றார்கள். சிலர் தெருவோரங்களிலும் ஆலயங்களிலும் தங்கள் வாழ்வைப் போக்குகின்றார்கள். சில முதியவர்கள் தங்கள் வாழ்க்கையைப் பிள்ளைகளுடனே இணைந்து வாழ விரும்புகின்றனர். காரணம் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் என்ற பாச உணர்வேயாகும். ஆனால் அவர்கள் அதனை உணராது தங்கள் உல்லாச வாழ்க்கைக்கு குடும்ப கௌரவத்திற்கு இடையூறு என எண்ணி அவர்களைப் புறந்தள்ளி விடுகின்றார்கள்.

இதேபோன்று பெரும்பாலான பிள்ளைகள் வயது முதிர்ந்த பெற்றோரைக் கைவிட்டு வெளிநாடு சென்றுவிடுகின்றார்கள். இதனால் இந்த முதிர்ந்த பெற்றோர்கள் சரியான பராமரிப்பின்றி மிகுந்த கஷ்டத்துக்குள்ளாவதை நாம் காண முடிகின்றது. ''அன்னையும், பிதாவும் 'பின்னடிக்கிடைஞ்சல்'' என்ற புதுமொழி பிள்ளைகள் மத்தியில் புகுந்துள்ளதே காரணம். இந்த வயது முதிர்ந்த பெற்றோர் இறுதியில் வறுமை, பிணி ஆகியவற்றால் சிக்குண்டு மரணத்தைத் தழுவியிருக்கின்றார்கள். ஆனால் இவர்களது மரண அறிவித்தல் மட்டும் பெரும் படாடோபமாக வெளியிடப்படுகின்றது. இதுதான் இன்றைய காலம்.

இவற்றைக் கருத்திற்கொண்டுமுதியோர் தினத்தை முன்னிட்டுப் பாடசாலை மற்றும் இளைஞர் கழக மட்டங்களில் விழிப்புணர்வைக் கொண்டுவரும் முகமாக கவிதை, கட்டுரை, நாடகம், தெருவோர நாடகம் போன்றவற்றை நடத்தி முதியவர்களுக்கு உதவும் பணிகளை விரிவுபடுத்த வேண்டும். இதன்மூலம் முதியோர் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை இளைய சமூகம் மத்தியில் எடுத்தியம்பி விழிப்புணர்வையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்த முடியும். ★

# திக்கம் வடிசாலை ஊழியர்கள் சம்பள உயர்வுக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 2

அரசாங்கம் வழங்கவுள்ள சம்பள உயர்வு தமக்கும் வழங்கப்படவேண்டும் என்று திக்கம் வடிசாலை ஊழியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பான மகஜர் ஒன்றையும் அவர்கள் ஈ. பி. டி. பி யின் செயலாளர் நாயகமும். யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவிடம் கையளித்துள்ளனர்.

திக்கம் வடிசாலை 01-08-1992இல் வடமராட்சி பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியால் பொறுப்பேற்கப்பட்ட பின்னர் அதில் பனை அபிவிருத்திச் சபை ஊழியர்களும், கூட்டுறவு ஊழியர்களும் நேர்முகப்பரீட்சை மூலம் உள்வாங்கப்பட்டனர்.

எனினும் இந்த வருடம் முதல் அதிகரித்த சம்பள உயர்வை வழங்க அரசாங்கம் மறுத்து வருகிறது. இதனால் மிகக் குறைந்த சம்பளத்தைப் பெற்று வரும்நாம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம்.

இப்படி அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி ஊழியர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட டக்ளஸ் தேவானந்தா சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார் என ஈ. பி. டி. பி. வெளியிட்ட பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-7)

# 10 யுவதிகளுக்கு தையல் இயந்திரம்

வலி. கிழக்கு, ஒக். 2

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த 10 யுவதிகளுக்கு சுய தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு தையல் இயந்திரங்கள் பிரதேச சபையினால் வழங்கப்படவுள்ளன.

வசதி குறைந்தவர்களுக்கான வேறு புதிய உதவித் திட்டங்களும் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாகப் பிரதேச சபை உபதலைவர் எல். ரவி தெரிவித்தார்.

(ஐ-180)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 2

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் பரிசளிப்பு விழா கல்லூரியின் பிரதான மண்டபத்தில், கல்லூரி அதிபர் திருமதி அ. வேலுப்பிள்ளை தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

விழாவின் பிரதம விருந்தினராகப் பொறியியலாளர் க. கனகசபை கலந்து கொண்டு 'கல்லூரியின் மேம்பாடு' பற்றி உரை நிகழ்த்தினார்.

பரிசளிப்பு வைபத்தில் கலந்து கொண்ட வைத்திய கலாநிதி திருமதி சிவபாத நாயகி கனகசபை பரிசில்களை வழங்கினார்.

விழாவின் இறுதியில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

(9-15-28)

# நுளம்பு பெருக்கம்

குருநகர், ஒக். 2

குருநகரில் மக்கள் மீளக் குடியேறியுள்ள பகுதிகளில் நுளம்பின் பெருக்கம் அதிகரித்து வருகிறது.

இரவில் மட்டுமல்லாது பகலிலும் நுளம்பின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாகவும் தற்போது பெய்து வரும் மழையினால் நுளம்பு பெருகியுள்ளதாகவும் இங்குள்ள மக்கள் தெரிவித்தனர்.

(ஐ-51)

# வாசகர் திருமுகம்

## நாமும் இந்நாட்டவரே!

96 ஆம் ஆண்டு ஏப்ரலின் பின் யாழ். குடாநாடு பாதுகாப்புப் படைகளின் கட்டுப்பாட்டில் வந்த பின் இங்கு சிவில் நிர்வாகம் நடைபெறுவதாக உலகெங்கும் தம்பட்டம் அடிப்பதில் அரசாங்கமும், அரச நலன் விரும்பிகளும் முன்னின்றன. ஆனால் இங்கு நடப்பது தான் என்ன?

யாழ். போதனா வைத்தியசாலையில் ஏ. ரி. எஸ். மருந்து இல்லாததால் அண்மையில் ஒருவர் மரணமடைய நேரிட்டுள்ளது. இது மட்டுமல்ல இன்னும் எத்தனையோ மருந்து வகைகளுக்குத்தட்டுப்பாடு நிலவுகின்றது. 'வாருங்கள் வளமான வாழ்வு தருகின்றோம்' எனவருந்தி அழைத்தவர்களுக்கு நோயாளருக்கு தேவையான மருத்துவ வசதிகளைக் கூட வழங்க வக்கில்லை; அல்லது அக்கறையில்லை. இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள இங்கேயே இந்நிலை எனின் வன்னி வாழ் மக்களின் நிலையைக் கூறத் தேவையில்லை.

இது மட்டுமல்ல தபால் போக்குவரத்துக் கூட தத்தித் தத்தித்தான் நடக்கிறது யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படுவதற்காகப் பெருந்தொகை தபால் பொதிகள் திருகோணமலையில் தவம் கிடப்பதாகத் தகவல். தபால் சேவையைக்கூட ஒழுங்காக நடத்த முடியாத அரசுதான் வளமான வாழ்வை வழங்கப்போகின்றது.

''மாணவர்களுக்கு மகத்தான எதிர்காலத்தை உருவாக்கித் தந்திடுவோம்'' என கூறினார் 96 இன் நடுப்பகுதியில் இங்கு வந்த கல்வியமைச்சர். ஆனால் காலம் கடந்தும் இலவசப்பாட நூல்கள் கூட இன்னும் இங்கு வந்தபாடில்லை. ஆய்வு கூட தேவைகளுக்காக இரசாயனப் பதார்த்தங்களை இங்கு கொண்டு வருவதென்பது பாலைவனத்தில் கிணறு வெட்டுவதற்கு ஒப்பானது.

தென்பகுதியில் குண்டு வெடித்து, மக்கள் கொல்லப்பட்டால், வெள்ளப்பெருக்கு ஏற்பட்டால் உடனடி நிவாரணம் வழங்க அமைச்சர்கள் விரிந்து கட்டிச் செல்வார்கள். ஆனால் இங்கு ஷெல்லடிபட்டு இறந்தாலென்ன, இடப்பெயர்வுகள் ஏற்பட்டாலென்ன ''இங்கு இருப்பவர்களும் ஸ்ரீலங்கா மக்கள்தான்'' என்று யாராவது கூறியபின்தான் அரசாங்கத்திற்கு அது தெரிய வருகின்றது.

இந்த இலட்சணத்தில்தான் சிவில் நிர்வாகம் நடக்கின்றது என மார்தட்டும் அரசாங்கத்தின் மாயவலையில் மயங்கி நிற்கின்றார்கள் நம்மில் சிலர்.

இந்நாட்டு வாழ் மக்களுக்கு தென் பகுதியில் கிடைக்கும் உரிமைகளும், வாய்ப்புக்களும், வசதிகளும் எமக்கும் பாரபட்சமின்றி கிடைக்கும் நாள் எப்போது?

**வே. சந்திரசேகர்**
திருநெல்வேலி.

## சித்த, ஆயுள்வேத மருத்துவர்கள் வேறு வைத்தியம் செய்யலாமா?

இன்று, ஆங்கில மருந்துகளை நீண்டகாலம் பாவித்தும் சில நோய்களுக்கு நிவாரணம் பெறமுடியாமல், சித்த, ஆயுள்வேத. ஹோமியோபதி போன்ற வைத்திய முறைகளை நாடினால் அங்கும் அனேகமான வைத்தியர்கள் ஆங்கில மருந்துகளைக் கலந்து கொடுத்து போலி வைத்தியம் செய்கிறார்கள் இதனால் பொதுமக்கள் ஏமாற்றப்படுகிறார்கள் போலி வைத்தியம், சட்டத்துக்கு முரணான வழியில் செயல்பட்டு பணம் சம்பாதிக்கும் நோக்கம் உடையதாக இருக்கிறது இதைச் சேவை என்று கருதமுடியாது.

அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில வைத்தியர்கள்—வைத்திய நிலையங்கள் அரசினதும் தனியாரினதும் தாராளமாக இருக்கும் போது ஏனைய வைத்திய முறைக்கு பதிவு செய்தவர்கள் ஆங்கில மருந்துகளை, குறிப்பிட்ட ஒரு சில மருந்துகள் தவிர, வைத்திருப்பதும் நோயாளர்களுக்கு கொடுப்பதும் போலியான வைத்தியமும் சட்டவிரோதமான செயலும் ஆகும்.

ஆங்கில மருந்துகள் பற்றித் தங்களுக்குச் சகலதும் தெரியும் என்று பத்திரிகைகள் மற்றும் வானொலிகளில் விளம்பரப்படுத்தி தங்கள் செயலை நியாயப்படுத்த முற்படுவதிலும் பார்க்க தங்கள் நியாயங்களை அரசாங்கத்துக்கு அதாவது சிறிலங்கா வைத்திய சங்கம் (Srilanka Medical Council) முன் வைத்து அங்கிகாரம் பெற்று விட்டால் போலி என்ற நாமம் இல்லை. அது வரைக்கும் அவர்கள் போலி வைத்தியர்களே. இவர்களை சட்டத்தின் முன் நிறுத்த அரசாங்கத்திடம் போதிய ஆளணி இல்லை. எனவே பொதுமக்கள் எந்த வைத்தியர் ஆங்கில வைத்தியம் செய்ய அனுமதிக்கப்பட்டவர் என்பதை அறிந்துகொள்ள வேண்டும். பிரத்தியேக வைத்தியம் செய்பவர்கள் தங்கள் விளம்பரத்தில் பதிவு இலக்கத்துடன் எந்த முறையான வைத்தியம் அதாவது பதிவு செய்யப்பட்டது என்பதைக் (உதாரணமாக ஆங்கில வைத்தியம்) குறிப்பிட்டால் பொதுமக்களுக்கும் அரசாங்கச் சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கும் உதவியாக இருக்கும். அனேகமான விளம்பரங்களில் இவ் விபரத்தை அறிய முடியாது இருக்கிறது.

பொதுமக்களின் நலன் கருதியே வைத்திய சேவைக்கென சட்டங்கள் இயற்றப்பட்டு ஒவ்வொரு வைத்திய முறைக்கும் வெவ்வேறான பதிவுகள் செய்யப்படுகின்றன,

**வே. மகேந்திரன்**
சுன்னாகம்.

# வன்முறைகளில் சம்பந்தப்பட்டால் அமைச்சரவையில் இடமில்லை!

## அமைச்சர்களுக்கு ஜனாதிபதி எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 2
இன்னும் 10 நாள்களில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலுக்கான பிரசாரங்களும் வாக்களிப்பும் வன்முறையற்றதாக இருக்க சகல தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருக்கும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க, தேர்தல் மோசடிகளில் ஈடுபட்டால் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று தனது அரசின் அமைச்சர்களைக் கடுமையாக எச்சரித்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

'எவராக இருந்தாலும் அரசியல் வன்முறைகளில் ஈடுபட்டால் அவருக்கு எனது அமைச்சரவையில் இடமில்லை' என்று நேற்று முன்தினம் திருமதி குமாரதுங்க விடுத்திருக்கும் அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

திருமதி குமாரதுங்கவின் வெளிநாட்டு விஜயத்தின் நோக்கம் என்னவென்று உடனடியாகத் தெளிவாகத் தெரிய வரவில்லை. ஆனால் ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின்போது மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதலில்பாதிக்கப்பட்ட தனது ஒரு கண்ணுக்குச் சிகிச்சை பெறுவதற்காக முன்னர் பல தடவைகள் அவர் லண்டன் சென்று வந்தார் என்பது தெரிந்ததே.

பொதுத் தேர்தலில் தனது கட்சிக்குப் பாரிய வெற்றி கிடைக்கும் என்று நம்பிக்கை தெரிவித்திருக்கும் திருமதி குமாரதுங்க காடைத்தனம் மற்றும் அச்சுறுத்தல்கள் மூலமாகத் தேர்தலில் வெற்றி பெறுவதற்குச் சில தனிப்பட்ட நபர்களும் குழுக்களும் முயற்சியை மேற்கொள்வதாகக் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

தேர்தல் வன்செயல்கள் தொடர்பான முறைப்பாடுகளைக் கையாளுவதில் பக்கச் சார்பின்றி நடவடிக்கைஎடுக்க வேண்டும் என்று பொலீஸாரைப் பணித்திருக்கும் திருமதி குமாரதுங்க, ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்திற்குப் பொலீஸார் அடிபணிந்து செயற்படவேண்டிய தேவையில்லை. அத்துடன், ஏனைய அரசியல் கட்சிகளின் கருவிகளாகவும் பொலீஸார் மாறிவிடக் கூடாது என்று வலியுறுத்தியிருக்கிறார்.

வெளிநாடு புறப்பட முன்பு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

(ஐ-4)


## நிர்வாக லிகிதர் தேவை

யாழ். மணிக்கூட்டு வீதி, அரசடி விநாயகர் ஆலயத்துக்கு லிகிதர் ஒருவர் உடனடியாகத் தேவை.
விண்ணப்பதாரர் ஆலய சுற்றாடலில் வசிப்பவராக இருந்தல் வேண்டும்.
விண்ணப்பங்கள் 15 - 10 - 2000 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

நிர்வாக சபை
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(78977)


## 4ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 06 — 04 — 1969

உதிர்வு 17 — 09 — 1996

### செல்வி பரமேஸ்வரி தம்பையா (உஷா)

(பொருளியல் சிறப்புக்கலை நான்காம் வருடம் யாழ். பல்கலைக் கழகம்)

திதி: 02-10-2000

ஆண்டுகள் நான்காகி
ஆறவில்லை எம்துயர்.
காட்சிகள் மாறலாம்
காலங்கள் மாறலாம்
ஆனால் உங்கள் இனிய
முகம் என்றும்
நீங்கா நினைவலையில்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் நீங்காத நினைவில்
ஜெகன், விந்தன்.

கோணாவளை வேன்,
கொக்குவில்.
(78980)

## நீங்கா நினைவலைகள்

முதலாம் ஆண்டு நினைவு 5 ஆம் ஆண்டு நினைவு



அமரர்
### சுப்பையா நடராசா
மலர்வு 28-08-1929 உதிர்வு 02-10-1999

அமரர்
### நடராசா சிறீபாலன் (திரு)
மலர்வு 05-07-1972 உதிர்வு 31-10-1995

திதி: 02 -- 10 -- 2000

(கார் Ey 2745) பலாலி வீதி, திருநெல்வேலி.

''காலங்கள் உள்ளவரை உங்கள் நினைவுகள் எம்மோடு வாழ்ந்திடும்''

அமிர்தநாயகம் சாந்தினி.
சாந்தசோலை, அல்வாய்.

குடும்பத்தினர்.
(78862)

# சிறுவர்கள், கர்ப்பிணிகளுக்கு சத்துணவு மா விநியோகம்

வலி. கிழக்கு, ஒக். 2
தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்கள், கர்ப்பிணித்தாய்மார்களுக்கு சர்வோதய நிறுவனம் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை மூலம் சத்துணவு மா பைக்கற்றுகளை வழங்கி வருகின்றது.

வலி. கிழக்குப் பிரதேச சபையின் ஊடாக உப அலுவலகங்களில் வைத்து இந்தச் சத்துணவு வழங்கப்பட்டு வருகின்றது.

இதனை இதுவரை பெறாதவர்கள் பிரதேச சபையின் உப அலுவலகங்களில் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-180)

# வாக்காளர் அட்டை பெறாதோர் தபாலகத்தில் பெற ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக். 2
எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் யாழ். பிரதம தபாலகத்துக்கு நேரில் வந்து தமது வாக்காள அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று பிரதம தபாலதிபர் எஸ். மார்க்கண்டன் தெரிவித்தார்.

தபால் ஊழியர்கள் மூலம் ாக்குச் சீட்டுக்களை வாக்காளர்களுக்கு விநியோகிக்கும் பணி இன்று ஞாயிற்றுக்கிழமையுடன் முடிவடைவதாகவும் —

யாழ். பிரதம தபாலக எல்லைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வாக்காளர்கள் இதுவரை வாக்குச் சீட்டுக்களைப் பெறாதிருப்பின் நாளை திங்கட்கிழமை தொடக்கம் பொதுத் தேர்தல் நடைபெறும் தினமான எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிவரை யாழ். பிரதம தபாலகத்துக்கு நேரில் வந்து பெற்றுக் கொள்ள முடியும் என்றும் —

அவர் தெரிவித்தார்.

(ஐ-9)

## வல்லிபுராழ்வார் மஹோற்சவம்

சரித்திரப் பிரசித்திபெற்ற வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் வருடாந்த மஹோற்சவம் கடந்த வியாழனன்று முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

கொடியேற்ற உற்சவத்தில் பெருந்திரளான பக்தர்கள் கலந்துகொண்டு வல்லிபுர ஆள்வாரைத் தரிசித்தனர்.

நாளை மறுதினம் புதன் கிழமை வெளி வீதி உலா உற்சவமும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெண்ணெய்த் திருவிழாவும் 9 ஆம் திகதி திங்கட்கிழமைகம்சன் போர்த் திருவிழாவும் இடம்பெறும்.

12 ஆம் திகதி வியாழக் கிழமை ரதோற்சவமும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சமுத்திர தீர்த்தோற்சவமும் 14 ஆம் திகதி சனிக்கிழமை கேணித் தீர்த்தமும் நடைபெறும். (ஐ-173)


## வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி மேற்கு, நாவலடி ஒழுங்கை என்னும் முகவரியில் அமைந்துள்ள ஒரு பரப்புக் காணியும், நல்ல நிலையில் உள்ள வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு:

ச. குனேந்திரன்,
இல. 10, பரமேஸ்வராச்சந்தி,
திருநெல்வேலி.
(78975)


## நன்றி கூறுகின்றோம்

கோண்டாவில் கிழக்கு
### அருள்மிகு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தானம்

மேற்படி தேவஸ்தான புனரமைப்புப் பணிக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையினூடாக ஒரு மில்லியன் (பத்து லட்சம் ரூபா) பெற்றுத்தந்தமைக்காக

★ திரு. துரை தவராசா J. P.
(உப தலைவர், நல்லூர் பிரதேச சபை)

★ திரு. கனகரத்தினம் மணிபல்லவராஜன் J. P. U. M.
(தலைவர், நல்லூர்ப்பிரதேச சபை, ஈ.பி.டி.பி. யாழ். அமைப்பாளர்)

★ திரு. வி. கே. ஜெகன்
(நாடாளுமன்ற உறுப்பினரும், யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளரும்)

★ கௌரவ கே. என். டக்ளஸ் தேவானந்தா
(யாழ். நாடாளுமன்ற உறுப்பினரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், E. P. D. P. செயலாளர் நாயகமும்)

இவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு பல்லாண்டு வாழ எம்பெருமானின் அருள் வேண்டி நிற்கின்றோம்.

ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தானம்
பரிபாலன சபையினர்,
கோண்டாவில் கிழக்கு.
(78978)

# தேசிய சேமிப்பு வங்கி
## அறிவித்தல்
### சாவகச்சேரிக் கிளை

கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக சாவகச்சேரியில் சிக்குண்டிருந்த சில முக்கிய ஆவணங்கள் மீட்கப்பட்டு விட்டன.

இந்த ஆவணங்களை நெறிப்படுத்தி வழமையான வங்கிச் சேவைகளை எமது வாடிக்கையாளர்களுக்கு மிக விரைவில் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் இதுவரை தற்காலிகமாக யாழ்ப்பாணம், சுன்னாகம் கிளைகளில் இயங்கி வந்தமை நிறுத்தப்பட்டு மீண்டும் இயங்கும் திகதி விரைவில் வாடிக்கையாளர்களுக்கு அறிவிக்கப்படும்.

இதனால் வாடிக்கையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம்.

**முகாமையாளர்,**
**தேசிய சேமிப்பு வங்கி,**
**சாவகச்சேரிக் கிளை.**

(78981)


# சங்கிலியன் படை சுவரொட்டிகளின் பின்னணியை விளக்குகிறது ஈ.பி.டி.பி.

"ஈ.பி.டி.பி. அமைப்பின் அலுவலகங்கள் மீது தாக்குதல் நடத்தப் போகின்றோம். எனவே அந்த அலுவலகங்களுக்குச் செல்லாது ஒதுங்கியிருக்க வேண்டும்" - என்று பொது மக்களைக் கோரும் சுவரொட்டிகள் 'சங்கிலியன் படை' என்ற பெயரில் வடமராட்சிப் பகுதியில் நேற்று ஒட்டப்பட்டிருந்தன.

இது தொடர்பாக ஈ.பி.டி.பி. அமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஈ.பி.டி.பிக்கும் மக்களுக்கும் உள்ள உறவை சகிக்க முடியாத அரசியல்வறுமையில் வாடுகின்ற மாற்றுக் கட்சியினர், 'சங்கிலியன் படை' எனும் பெயரில் மிரட்டல் சுவரொட்டிகளை வடமராட்சிப் பகுதியில் ஒட்டி வருகின்றார்கள்.

இது குறித்து எமது நேசத்துக்குரிய மக்கள் எவ்வித குழப்பமும் அடையவேண்டிய அவசியமில்லை. இத்தகைய மக்கள் விரோத சக்திகளை எதிர்வரும் பொதுத்தேர்தல் தினத்தன்று உங்கள் வாக்குப் பலத்தினைப் பயன்படுத்தி தமிழ் அரசியல் அரங்கிலிருந்து விரட்டியடுத்து எமது மண்ணில் நிரந்தர சமாதானம் மலர ஈ.பி.டி.பியைப் பலப்படுத்தும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தேர்தல் பிரசார வேலை தொடங்கப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை, அநாமதேய கடிதங்கள், மிரட்டல் சுவரொட்டிகள், எமது ஆதரவாளர்கள் மீது கிரனேட் வீச்சு, தாக்குதல்கள், ஆதரவாளர்களுடைய அடையாள அட்டைகள் பறிப்பு போன்ற பல்வேறுபட்ட ஜனநாயக விரோத - மக்கள் விரோத - செயற்பாடுகள் எம்மீது மாற்றுக் கட்சியினரால் முடுக்கி விடப்பட்டுள்ளன. தேர்தல் பிரசாரக் காலங்களில் எம்மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இத்தகைய வன்முறைகளை தொடர்ச்சியாக அவதானித்த நாம், புலிகளின் பெயரில், இத்தகைய நடவடிக்கைகளை தேர்தலில் போட்டியிடும் மாற்றுக் கட்சியினரே மேற்கொண்டு வருகின்றனர் என்பதை உறுதி செய்துள்ளோம்.

உண்மையான அர்ப்பணிப்புடன் மக்களுக்காக என்றும் மக்களோடு நின்று செயற்பட்டு வரும் ஈ.பி.டி.பியின் செயற்பாடுகளுக்கு, முட்டுக்கட்டை போடும் இம்மாற்றுக் கட்சியினர், நாடாளுமன்றம் சென்று எமது மக்களுக்கு என்ன செய்யப் போகின்றார்கள்? எமது மக்கள் முகங்கொள்ளும் அன்றாட அவலங்களைத் தீர்த்துவைக்க வகையற்ற இந்த மாற்றுக்கட்சியினர் ஈ.பி.டி.பி. மக்களுக்குச் செய்துவரும் சேவைகளைக்கூட தடுக்க முனைவதை எப்படி நாம் அனுமதிப்பது?

எமது மக்களின் அரசியல் எதிர்காலம் குறித்து தீர்க்கதரிசனத்துடன் செயற்படுவதுடன் அனைத்து வித அன்றாட அவலங்களையும் தீர்த்துவரும் ஈ.பி.டி.பியின் மீது, தங்களது தோல்வியை நிச்சயித்துக் கொண்ட மாற்றுக் கட்சியினர் மேற்கொள்ளும் இத்தகைய நடவடிக்கைகள் குறித்து பொதுமக்கள் விழிப்பாக இருக்கும்படியும் நிரந்தர சமாதானம் எம்மண்ணில் மலர்ந்திட ஈ.பி.டி.பியைப் பலப்படுத்துமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


## தவறிவிட்டது

13சிறி 0028 இலக்க முடைய ஒட்டோவின் பதிவுப் புத்தகமும், வேறு சில ஆவணங்களும் தவறிவிட்டன.

இதனைக் கண்டெடுத்தவர்கள் Dr.சுப்பிரமணியம் வீதியில் (சுன்னாகம்) அமைந்திருக்கும் JAFFNA TECHNICAL CENTRE இல் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(78989)



# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2000
**தமிழ் மக்களுக்காக சர்வதேசமெங்கிலும் ஒலித்த குரல்**

நாடாளுமன்றத்தில் ஒலிப்பதற்கு......

## ஐ.பி.சி.ஆஞ்சனேயரை

ஆதரிப்போம்

| ஐக்கிய தேசியக் கட்சி | | X | 8 | X |
|---|---|---|---|---|

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 (X) | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | 12 | | | | | | | | |

ஆஞ்சனேயரைத் தெரிவுசெய்ய

யானைச் சின்னத்துக்கு வாக்களித்து இலக்கம் 8 க்கு நேரே புள்ளடியிடுங்கள்

(78911)



## பயிற்சி நெறிகள்
## யாழ். மத்திய கல்லூரி
(முறைசாராக் கல்விப் பிரிவு)

கீழ்வரும் பயிற்சிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

I. பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி.
II. நூலகர்களுக்கான பயிற்சி.
III. தையல் பயிற்சி (வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் மட்டும்).
IV. கணனிப் பயிற்சி. V. தட்டச்சு தமிழ் - ஆங்கிலம்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை கல்லூரி நேரத்தில் கல்லூரியின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். *பயிற்சிக் கட்டணம் எதுவுமில்லை.* ***விண்ணப்பப் படிவங்களைப் பெறுவதற்கான முடிவு திகதி: 15-10-2000.***

(C/13166) *– அதிபர்*





சின்னையா சிவஞானம்(சுகிதன்)
(அ.இ.ச.நீ.)
X
12 (X)

## கண்ணீரும் கம்பலையுடனும் வாழும் எம்மினமே!

பல வருட யுத்தத்தின் கொடுமையில் வீடு வாசல், பொருள் பண்டம், சொத்து சுகம், கற்பு மானம், கல்வி அறிவு, கலை கலாசாரம், உறவு நேசம், கணவன் மனைவி, அண்ணன் தம்பி, உற்றார் பெற்றார், உரிமை உயிர்....!. ஓ.....!. எல்லாமே போய்விட்டது!

**இந்தக் கொடிய யுத்தம் வேண்டுமா மக்களே?**

எமது மண்ணில் அமைதி, சமாதானம், நிம்மதி வேண்டாமா?

நிம்மதி வேண்டுமானால் சந்திரிகாவின் கரத்தைப் பலப்படுத்துவோம். யாழ். மாவட்ட மக்களாகிய நாம் அடைந்த துயர்மிகு வாழ்க்கையைச் சீர்தூக்கிப் பார்க்கிறோம்.

★ ஒரு சவர்க்காரத்துக்காக ஓமந்தைக்கு சயிக்கிள் உழக்கினோம்!
★ சாம்பலும், பனஞ்சாறும் போட்டு உடுப்புத் தோய்த்தோம்!
★ மின்சாரம் இல்லாமல் தொழிற்சாலைகளை இழுத்து மூடினோம்!
★ மின்சாரம் இல்லாததால் பல ஆயிரக்கணக்கானோர் தொழில் இழந்தோம்!
★ குண்டும் குழியுமான றோட்டிலே சயிக்கிள் ஓட்டினோம்!
★ விறகுக்காகவும், உணவுக்காகவும் சயிக்கிள் உழக்கி உழக்கி செத்தோம்!
★ மண்எண்ணெய் இல்லாமல் சயிக்கிள் ரயர் துண்டை எரித்து முற்றத்திலிருந்து சாப்பிட்டோம்!
★ எம் குழந்தைகளின் கல்வியை இழந்தோம்!
★ பஸ் வண்டி இல்லாமல் நடை நடையாய் அலைந்தோம்!
★ 30 ரூபா செலவில் பேசக் கூடிய தொலைபேசிக்கு 30,000/= செலவு செய்து கொழும்பு சென்றோம்!
★ பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலிகள் இல்லாமல் அறிவுச் சூனியர்களாய் இருந்தோம்!
★ சயிக்கிள் டைனமோவைச் சுற்றி ரேடியோ கேட்டோம்!
★ ஆஸ்பத்திரிகள் இயங்காமல், மருந்தில்லாமல் நோயாளிகள் பலர் இறந்துவிட்டார்கள்!
★ பனடோல் இல்லாமல் தலையிடியை தலையிலே வைத்தோம்!

ஆனால் இன்று.......?

இன்று நாம் அடைந்திருக்கும் நிம்மதிக்கு யார் காரணம்?

எல்லாமே சந்திரிகாவே......!

மக்களே சிந்தியுங்கள்.......!



வேல்முருகு தங்கராஜா
(அ.இ.ச.நீ. )
X
14 (X)

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14 (X) | 12 (X) | | | | | | | | |

# சுயேச்சைக் குழு - இல.3 - ஸ்ரீலங்கா சுதந்திரக கட்சி
## சந்திரிகாவின் ஏகப் பிரதிநிதிகள் நாமே!

(78909)

## தொண்டமானாறு, குடத்தனை கடலில்
# மீன் பிடிப்பதற்கான பிரதேசத்தை விஸ்தரிக்க கடற்படை இணக்கம்

தொண்டமானாறு, கற்கோவளம் மற்றும் குடத்தனைக் கடற்பகுதியில் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட கடல் பிரதேசத்தின் எல்லையை ஐந்நூறு மீற்றரில் இருந்து 2 கிலோ மீற்றராக விஸ்தரிக்க இணங்கப் பட்டுள்ளது.

இது தொடர்பாக அண்மையில் வடமராட்சி கடற்படையினருக்கும், அந்தப்பகுதியின் கடற்றொழிலாளர் பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இணக்கம் காணப்பட்டதாக ஈ.பி.டி.பி நேற்று விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி அமைப்பினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக்கலந்துரையாடலில் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கப்படும் நேரத்தை அதிகரிப்பதற்கும் இணக்கம் காணப்பட்டதாகவும்-

அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்குக் கடற்பகுதியில் மீனவர்களால் கைவிடப்பட்ட மீன்பிடி உபகரணங்களை மீட்டுவருவதற்கு தற்பொழுது அனுமதி வழங்க முடியாது எனவும்-

யுத்தம் தணியும் வரை இதற்கு மீனவர்கள் பொறுமையாக இருக்க வேண்டும் எனவும்-

கடற்படையினர் தமக்கு அறிவித்துள்ளனர் என்றும் - ஈ.பி.டி.பி அமைப்பு தெரிவித்துள்ளது. (உ-7)

### திருடிய டெக்குடன் திருடர்கள் சிக்கினர்

யாழ்.கொட்டடிப் பகுதியிலுள்ள வீடியோ கடை உரிமையாளர் ஒருவரின் வீட்டினுள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு கூரையைப் பிரித்து உள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த மூன்று டெக் மற்றும் வீடியோ உபகரணங்களைத் திருடிச்சென்றுள்ளனர்.

இதனையடுத்து நேற்றுக்காலை மேற்படி திருட்டுச் சம்பவம் இடம் பெற்ற பகுதியில் இருந்து சந்தேகத்தின்பேரில் அப்பகுதி இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்ட ஒருவர் கொடுத்ததாகக் கூறப்படும் தகவலின் அடிப்படையில் திருட்டுப் போன பொருள்கள் மீட்கப்பட்டதுடன் இச்சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவர் இனங் காணப்பட்டனர் எனத் தெரிவிக்கப் பட்டது.

இவ்வாறு இனங்காணப்பட்ட மூவரும் யாழ்.பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

மேற்படி வீடியோக்கடை உரிமையாளர் ஈச்சமோட்டையிலிருந்து இடம்பெயர்ந்து கொட்டடியில் வசித்து வந்தவர் எனக்கூறப்பட்டது. (உ-7-ரி)

### நெல்விதைப்பு பாதிப்பு

புன்னாலைக்கட்டுவன், ஈவினை, குப்பிளான் பகுதிகளில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் பருவமழை காரணமாக அப்பகுதிகளில் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

வயல்களில் மழை நீர் தேங்கி நிற்பதால் நிலத்தைப் பயிர்ச்செய்கைக்கு ஏற்றவகையில் உழுது பண்படுத்த முடியாத நிலையில் தமது செயற்பாடுகளை விவசாயிகள் நிறுத்தியுள்ளனர். (ஐ-9-133)

### புலிகளுடன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப்புலிகளையும் அவர்களது பயங்கரவாதத்தையும் இல்லாது ஒழிப்பதே தமது முக்கிய இலக்கு என்றும் -

அதன் பொருட்டு புலிகளுக்கு எதிரான யுத்தத்தைத் தொடரப் போவதாகவும் அவர் கூறியதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

### மேலும் 250.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீடுகளிலும், ஆலயங்களிலும் பொது நிறுவனக் கட்டடங்களிலும் தங்கியுள்ளனர்.

வரணிப் பகுதியில் பதற்றம் நிலவியதால் அங்கிருந்தும் மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

வரணியில் இராணுவக்கட்டுப்பாட்டுக்கு அப்பால் உள்ள குடமியன், நாவற்காடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களை வடமராட்சிக்குச்செல்ல படையினர் அனுமதிக்கவில்லை என்றும் கூறப்பட்டது.

அதே சமயம் மிருசுவில் படித்த மகளிர் திட்டத்தில் அமைந்துள்ள குடியேற்றப் பகுதிக்கு செல்வதற்கான பாதைகள் யாவும் போக்குவரத்துக்குத் தடைப்பட்டுள்ளதால் அந்தப் பகுதியைச் சேர்ந்த 65 குடும்பங்களும் வெளியேற முடியாத நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-3-9-15-117-109-173)




(C/13164)

கூட்டுறவாளர்களே! தொழிலாளர்களே!
அன்றாட அவலம் நீங்கி,
உழைப்புக்கு ஏற்ற ஊதியம் பெற்று,
சரிநிகர் சமானமாக வாழ
அளித்திடுங்கள் உங்கள் வாக்குகளை
வீணைச் சின்னத்திற்கு!

(ஈ.பி.டி.பி.)

1999ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தில் சனசமூக நிலையங்களின் அபிவிருத்திக்காக 53 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிதியில் இருந்து வழங்கப்பட்டுள்ளது.

### 5 மணிநேரம் தடுத்துவைப்பு

வவுனியா,ஒக்.2

தேர்தல் பிரசாரச் சுவரொட்டிகளை விநியோகித்துச்சென்ற ஐ.தே.க. வேட்பாளர் ஒருவர் படையினரால் ஐந்து மணி நேரம் வீதியோரத்தில் தடுத்து வைக்கப்பட்டார்.

வவுனியா - மன்னார் வீதியில்- வவுனியா நகருக்கு சமீபமாக நேற்றுக்காலை 8.30 மணியளவில் இந்தச்சம்பவம் இடம்பெற்றது.

இரா.தவச்செல்வம் என்ற வேட்பாளரே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டவராவார்.

மேற்படி சம்பவம் குறித்து ஐ.தே. கட்சியின் தலைமைப்பீடம் படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதை அடுத்து ஐந்து மணி நேரத்தின்பின் வேட்பாளர் விடுதலை செய்யப்பட்டார் எனத்தெரிவிக்கப்பட்டது.(அ-7-164)

# ஒலிம்பிக் போட்டி முடிவு

சிட்னி,ஒக்.2

மிலேனியம் ஆண்டின் முதலாவது ஒலிம்பிக் போட்டி நிகழ்வுகள் நேற்று சிட்னி நகரில் விழாக்கோலங்களுடன் இனிதே நிறைவடைந்தன.

நேற்றைய நிறைவு நாள் நிகழ்ச்சிகளில் மட்டும் 22 லட்சம் ஆஸ்திரேலிய டொலர்கள் பெறுமதியான வாணங்கள் வெடிக்க வைக்கப்பட்டன. இந்த வாண வேடிக்கைகள் கண்ணைப் பறிக்கும் விதத்தில் வர்ண ஜாலங்களைத் தோற்றுவித்து பார்வையாளர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தின.

இந்த முறை ஒலிம்பிக் போட்டிகளிலும் அமெரிக்கா தன் முதலிடத்தைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டது.

நடந்து முடிந்த ஒலிம்பிக் போட்டிகளில் முதல் 9 இடங்களைப் பெற்ற நாடுகளும் தங்கம், வெள்ளி, வெண்கலம் என்ற ஒழுங்கில் அவை பெற்ற பதக்கங்களின் விவரமும் வருமாறு :-

| | | | |
|---|---|---|---|
| அமெரிக்கா | 39 | 25 | 33 |
| ரஷ்யா | 32 | 28 | 28 |
| சீனா | 23 | 16 | 15 |
| ஆஸ்திரேலியா | 16 | 25 | 17 |
| ஜேர்மனி | 14 | 17 | 26 |
| பிரான்ஸ் | 13 | 14 | 11 |
| இத்தாலி | 13 | 08 | 13 |
| நெதர்லாந்து | 12 | 09 | 04 |
| கியூபா | 11 | 11 | 07 |

மொத்தம் 27 வகையான விளையாட்டுகளில் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளிலும் கலந்து கொண்ட வீர, வீராங்கனைகள் எல்லாமாக 301 தங்கப் பதக்கங்களையும், 299 வெள்ளிப் பதக்கங்களையும், 328 வெண்கலப் பதக்கங்களையும் வென்றுள்ளனர். (உ-8)

## நெடுந்தீவில் ஆயுதபாணிகளால்
# ஸ்ரீ.ல.சு. கட்சி சார்பு அணியின் தேர்தல் பிரசுரங்கள் எரிப்பு!
## ஜனாதிபதியின் படங்களும் அத்தோடு!!

யாழ்ப்பாணம்,ஒக்.2

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பான சுயேச்சைக் குழுவின் தேர்தல் பிரசுரங்கள் - ஜனாதிபதி ... குமாரதுங்கவின் படம் அ... பிரசுரங்கள் உட்பட - ... மாற்றுக் கட்சியினரால் வீடு புகுந்து பலாத்காரமாகப் பறிக்கப்பட்டு தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன.

மேற்படி சுயேச்சைக் குழுவின் ஊர்காவற்றுறை வேட்பாளரின் தந்தையும் ஆதரவாளர்களும் தங்கியிருந்த வீட்டிற்குள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 9.30 மணியளவில் அத்துமீறிப் புகுந்த ஈ.பி.டி.பி. கட்சியின் ஆதரவாளர்கள் இருபது பேரே தமது அணியின் பிரசுரங்களைப் பறித்து எரித்ததாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பினர் யாழ்ப்பாணம் பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

துப்பாக்கி மற்றும் பொல்லுகள், கல்லுகள் சகிதம் உட்புகுந்த 20 பேரும் அங்கு பெரும் ரகளை செய்ததாகவும்,வேட்பாளரின் தந்தையை ஆயுதமுனையில் மிரட்டியதாகவும் தகர வேலியை நாசமாக்கியதாகவும் பொலீஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து அமைப்பின் ஆதரவாளர்கள் மூவர், ஊர்காவற்றுறை வேட்பாளர் ஜெயந்தி பரமலிங்கத்தின் தந்தையாரிடம் ஒப்படைக்கவெனத் தேர்தல் பிரசுரங்களை எடுத்துச் சென்றனர்.

நெடுந்தீவு இறங்குதுறையில் இருந்து சென்ற - அவர்கள் பயணம் செய்த - பஸ், ஈ.பி.டி.பி. முகாமுக்கு முன்னால் சென்ற வேளை மறிக்கப்பட்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள் மூவரும் மிரட்டப்பட்டனர்; பிரசுரங்கள் அடங்கிய பொதியைத் திறக்குமாறு பணிக்கப்பட்டனர்; பின்னர் பொதியை எடுத்துக் கொண்டு பஸ்ஸுக்குள் ஏறுமாறு பணிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நடந்த அன்று இரவே ஆயுதபாணிகளாகச் சென்ற ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் தேர்தல் பிரசுரங்களைப் பறித்து எரித்தனர் - என்று பொலீஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-9)

### தென்மராட்சி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினரின் அனுமதிபெற்று அங்கு தனியாகச் சென்று திரும்பிய அவர் அங்குள்ள நிலைமை குறித்து விளக்கினார். அவர் கூறியதாவது:-

பிரதேச செயலகத்தின் மீது பல ஷெல்கள் வீழ்ந்து வெடித்துள்ளன. இதன் காரணமாகக் கூரைகள் சேதமடைந்துள்ளன.

செயலகத்தில் இருந்த பல ஆவணங்கள், கோவைகள் எல்லாம் மழை நீரில் மிதந்து கிடக்கின்றன. அவற்றில் பெரும்பாலானவை முற்றாகச் சேதமடைந்துவிட்டன.

முக்கிய ஆவணங்கள் சிலவற்றையும், ஓய்வூதியர்களின் சொந்தக் கோவைகளையும் மீட்டு வந்துள்ளேன்.

செயலகத்தில் இருந்த இரு பொட்டகங்களும் குப்புற வீழ்ந்து கிடந்தன. அவற்றில் உள்ள ஆவணங்களுக்கு என்ன நடந்தது என்று அறியமுடியவில்லை.

செயலகத்தில் இருந்த மேசைகளில் உள்ள 'லாச்சிகள்' யாவும் உடைக்கப்பட்டுக் கீழே கிடந்தன.

கணக்குப் பிரிவு அமைந்திருந்த பகுதி மீதே அதிக ஷெல்கள் வீழ்ந்திருப்பதால் கணக்குப் பதிவுகள் நாசமாகியுள்ளன - என்றார் அவர்.

தென்மராட்சிப் பகுதியில் உள்ள திணைக்களங்களைச் சேர்ந்த அதிகாரிகள் அங்கு சென்று தத்தமது திணைக்கள ஆவணங்களை மீட்க விரும்பின் பலாலி இராணுவ அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு அதற்கு அனுமதி பெறலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ-3-117)

### எழுதுமட்டுவாழ்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லைப்புலிகள் எழுதுமட்டுவாழ் இராணுவ முன்னரங்கப் பகுதிகளுக்குள் ஊடுருவியதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொடிகாமம் - வரணி வீதியில் உள்ள எருவன், மோக்கன், குடமியன் ஆகிய பகுதிகளில் குடியிருப்புகளை அண்டி ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததால் அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து முள்ளிக்குச் சென்றனர்.

விடுதலைப் புலிகள் இச்சமரின் போது அதிரடித் தாக்குதல்களை நடத்தியதாகவும் சொல்லப்பட்டது.

எழுதுமட்டுவாழ் பகுதியில் கடும் சண்டை நடைபெற்றதாகவும், விடுதலைப் புலிகளின் ஊடுருவும் முயற்சியைப் படையினர் தடுத்து விட்டதாகவும் ஊடகத் தகவல் நிலையம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சண்டையில் படையினர் தரப்பில் நான்கு பேர் இறந்ததாகவும் 41 பேர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

ஐம்பதுக்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகள் இறந்ததாகவும் அந்த அறிக்கை மேலும் தெரிவித்தது.

நேற்று, ஞாயிறுக்கிழமையும் தென்மராட்சிப்பகுதியில் விட்டுவிட்டு மோதல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. (அ-8-117-3)


Institute of Business Management Studies IBMS

IBMS இன் 2000/2001 புலமைப்பரிசில் திட்டம்

மேற்படி திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான விரிவுரைகள் அனைத்தும் 14.10.2000 அன்று முதல் ஆரம்பமாகும். இத்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்டு தமது பதிவினை மேற்கொள்ளத் தவறியவர்கள் 12.10.2000 வரை பதிவினை மேற்கொள்ளலாம்.

IBMS இன் புலமைப்பரிசில் திட்டத்தில் இணையத் தவறியவர்களுக்கான விசேட சலுகை

மேற்படி மாணவர்கள் எமது நிறுவனத்தில் தமது கணனிப் பயிற்சியை மேற்கொள்ள விரும்பின் அவர்களுக்கான விசேட கழிவுக்கட்டணம் (75%) முறை உருவாக்கப்பட்டுள்ளது. இச் சலுகை எக்கணனிக் கற்கை நெறிக்கும் வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

DIRECTOR
No.701, K.K.S. Road,
Jaffna. (C/13165)



மாண்புமிகு விடியலுக்காகவும்
மகத்தான சமாதானத்துக்காகவும்
வாக்களிப்போம்!



த. சுயந்திரன் (றொபேட்)
இல. 3

சுயேச்சைக் குழு - 2



X



அ. வரதராஜப்பெருமாள்
இல. 1

(7890)

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.10.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.